92

சந்திரோதயம்

OFFICE OF T. REGISTRAR OF BOOKS
16 OCT 1941
MADRAS

92

15-10-41

விரைந்து வருகிறான்

M. R. ராதா
★ **K. T. ருக்மணி** ★

நடிக்கும்

லக்ஷ்மி காந்தன்

(தமிழ் சமூகப் படம்.)

லக்ஷக்கணக்கான மக்கள் நாடகமாக கண்டு ரசித்த சித்திரம்.

உன்னத டைரக்ஷன் — உயரிய ஸ்டுடியோ

எதிர்பாருங்கள் !

விபரங்களுக்கு :— **சந்திரா பிக்சர்ஸ்,**

57, பூந்தமல்லி ஐரோட், மதராஸ்.

விநியோக உரிமை :—

திருநெல்வேலி, திருவாங்கூர், கொச்சி முதலிய இடங்களுக்கு

பாரகன் பிக்சர்ஸ் சிண்டிகேட்,

தூத்துக்குடி.

உங்களூர் தியேட்டருக்கு வருகிறது!

எங்கள் கம்பெனியின் மகத்தான
படக்காக்ஷி

ஆராய்ச்சி மணி

அல்லது

மனுநீதிகண்ட சோழன்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
நிறைந்த நீதிகள் கொண்டது

நடிகர்கள்

P. B. ரங்காச்சாரி
T. S. துரைராஜ்
M. R. சுவாமிநாதன்
B. P. ராமலிங்கம்
T. S. பொன்னுசாமி
K. S. கன்னைய பாகவதர்
K. V. கருணாலய பாகவதர்

M. R. சந்தானலக்ஷ்மி
T. V. ராஜசுந்தரி
M. S. தனலக்ஷ்மி
R. A. லக்ஷ்மிரமணி
B. N. சாவித்திரி
B. V. ராஜம்
M. K. சரஸ்வதி

★

கதை:
ஸ்ரீமத் ஜோதி இராமலிங்க சுவாமிகள்
மனுமுறைகண்ட வாசகத்தை தழுவியது.

வசனம் & பாடல்:
C. A. லக்ஷ்மண தாஸ்

★

ஸ்டுடியோ:
கந்தன் ஸ்டுடியோ

டைரக்டர்: ரகுவீர் S. ரம்ய	கேமிரா: H. படேல்
ஆர்ட் டைரக்டர்: B. D. கோட்வால்	சௌண்ட்: M. D. ராஜாராம்

விபரங்களுக்கு உடனே எழுதுக:

ஸ்ரீ கந்தன் & கோ., கோயமுத்தூர்.

எல்லாவிதமான

தமிழ்ப் புத்தகங்களும்

எங்களிடம் கிடைக்கும்

★

சக்தி காரியாலயம்

புத்தக வியாபாரிகள்

367, எஸ்பிளனேட், சென்னை

(ஹைகோர்ட்டுக்கு எதிரில்)

தபால் பெட்டி *1361* தந்தி: *'MONTHLY'*

புத்தக விலைப்பட்டியல் வேண்டுவோருக்கு அனுப்பப்படும்.

ஒரே ஒரு மாதம் வரை — ஒரு கடிகாரம் ரூ. 6—0—0



நவீன அமைப்பும், அழகான வடிவும் கொண்ட கை கடியாரம் 6 வருடம் உத்திரவாதம் சரியான காலம் காட்டும். நல்ல குரோமியம் கேஸில் விலை ரூ. 6. ரோல்டு கோல்டு 10 வருடம் உத்தரவாதம். 6 ஜூவல் கொண்டது ரூ. 8. தபால் பாக்கிங் 10 அணா. 3 கடிகாரம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம். 6 கடியாரமாயிருந்தால் ஒரு கை கடியாரம் இனாம். வாங்கும் கடியாரத்தின் நம்பரைக் குறித்து எழுதவும். ஒரு வாரத்தில் சம்மதமில்லாவிடில் பணம் வாபஸ். காட்லாக் இனாம்.

CALCUTTA CLOCK Co., 15/1. Joymitter St, P. O. Hatkhola, Calcutta. (135A)

சந்திரோதயம்

PHONE 2572

60, தம்புசெட்டி தெரு + மதராஸ்.

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" — குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 6	சென்னை 1941ஞு அக்டோபர்மீ 15உ	முத்து. 6

பொருளடக்கம்

			பக்கம்
எண்ணெய் ஸ்நானம்	...	...	4
என்ன சங்கதி?	...	...	8
சிரித்துப்பார்	...	...	11
பார்வைக்கு வந்தவை	...	"தேனி"	13
நட்சத்திர உலகிலே	...	...	15
தரும ராஜன்	...	...	...
சலனமும் சப்தமும்	...	...	...
உடைந்த படகு	...	"நாதன்"	25
துக்கடாக் கதை	...	"எத்து"	32
நாலணு போச்சு	...	"ஜல்ஸா"	33
தமிழும் சம்ஸ்கிரதமும்	...	எம். எஸ். சுந்தரேசய்யர்	36
பொய் மெய்யானது (பாப்பாப் பகுதி)	...	எஸ். ஐ. முத்து	39
என்ன யோசனை	...	ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்	42
திருட்டுக் காதலா?	...	எஸ். சுப்ரமணியன் எம். ஏ.	43
விசித்திரக் குளம்	...	தெ. மாசில்லாமணி	45

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவையாரையும் குறிப்பிடுவனவல்ல.

எண்ணெய் ஸ்நானம்

'கலியாண சந்தடியில் தாலிகட்ட மறந்தான்' என்று ஒரு பழமொழி யிருக்கிறது. கலியாணம் இந்து சமூகத்தில் மிக முக்கியமான ஒரு காரியம். அதில், தாலி கட்டுவதோ மிக மிக முக்கியமான ஒரு சடங்காகும். கல்யாணத்தில் ஒருவன் தாலி கட்டவே மறந்து விட்டானென்ருல் கலியாணம் நடக்கவில்லையென்றுதான் அர்த்தம்.

இப்பொழுது ஒரு வெள்ளைக்கார துரை, 'கலியாணத்தில் தாலிகட்ட மறந்தது' போல் ஒரு காரியம் செய்திருக்கிருர்.

வெள்ளையர்களின் கலியாணங்களில் தாலி கட்டுவது கிடையாது. ஒருவேளை அந்த ஞாபகத்தில் அவர் இருந்திருக்கலாம்.

இந்துக்களுக்கு முக்கியமானது தீபாவளிப் பண்டிகை. தீபாவளிப் பண்டிகைக்கு முக்கியமானது எண்ணெய் ஸ்நானம். எண்ணெய் ஸ்நானம் செய்யவில்லை என்ருல் தீபாவளியும் இல்லை யென்றுதான் அர்த்தம்.

ஆனுல் அலிப்புரம் சிறையிலிருக்கும் (தப்பான அர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். சிறையில் அவர் சூப்பரின்டென்டாய்த்தான் இருக்கிருர்) ஸ்ரீ ஹௌவ் துரைக்கு தீபாவளிப் பண்டிகையோ, எண்ணெய் ஸ்நானமோ முக்கியமாய்த் தெரியவில்லைபோல் தோன்றுகிறது.

சிறையில்—அதிலும் அலிப்புரம் சிறையில் கைதிகள் படும் கஷ்டங்கள் சொல்லத் தரமல்ல. அதிகாரிகள் கைதிகளுக்கு அளவற்ற கஷ்டங்களைத்தான் கொடுக்கிருர்களென்ருல், அவர்கள் பண்டிகைகள் கொண்டாடுவதையும் தடுத்து விடுகின்றனர். இது மிகவும் மனித சுபாவமற்ற செய்கையாகும்.

பண்டிகை தினங்களில் அதைக் கொண்டாடும் பொருட்டு அதற்கான சாமான்களை வெளியிலிருந்து கைதிகளின் நண்பர்கள் அனுப்பி வைப்பது வழக்கம். அப்படி அனுப்பப்படும் சாமான்களை அனுமதித்து அவைகளைக் கைதிகளிடம் சேர்ப்பதும் ஜெயில்களில் வழக்கமா யிருந்திருக்கிறது.

ஆனால் அலிப்புரம் சிறையில் இப்பொழுது அந்த வழக்கத்துக்கு ஒரு முட்டுக்கட்டையைப் போட்டிருக் கிறார் ஸ்ரீ ஹௌவ்.

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு வேண்டிய சாமான் களை அனுப்புவதற்கு அனுமதி கோரி, சட்ட சபை அங்கத்தினரான ஸ்ரீ எச். சீதாராம ரெட்டி அலிப்புரம் ஜெயில் சூப்பரென்டெண்டுக்குக் கடிதம் எழுதி யிருந்தார். மகா கருணை வாய்ந்த ஹௌவ் துரை அதற்கு உடனே அனுமதி கொடுத்து விட்டார். ஆனால் அவர் கொடுத்திருக்கும் அனுமதியில் ஒரு அதி சயம் இருக்கிறது. பண்டிகைக்கு வேண்டிய சாதாரண சாமான்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டு மிக முக்கியமான எண்ணெய், சீக்காய்த் தூளை அனுமதிக்காததுதான் அந்த அதிசயம்.

இவருடைய இந்தச் செய்கை கலியாணத்தில் தாலி கட்ட மறந்த கதை யையே ஞாபக மூட்டுகிறது.

தீபாவளிப் பண்டிகையில் விருந்தைக் காட்டிலும், எண்ணெய் ஸ்நானமே முக்கியமா யிருந்தும், அந்த முக்கியமானதை மறுப்பது, கைதிகள் தீபாவளி யையே கொண்டாடாதிருக்கும்படி தடுப்பதைப் போலாகும்.

இப்படிச் செய்வது ஏன் என்று கேட்டால் ஜெயில் சட்டத்தில் அதற்கு இடமில்லை என்று கூறுகிறார் ஸ்ரீ ஹௌவ்.

ஜெயில் விதிகளின்படி நடப்பதென்றால் பண்டிகைகளுக்கு வேண்டிய விருந்து சாமான்களைக் கூட அனுமதிக்க இடமில்லை என்றாகிறது.

அப்படி யிருந்தும் சிறை யதிகாரிகள் விருந்து சாமான்களை அனு மதித்துக் கொள்கிறார்கள். விருந்து சாமான்களுக்கு மட்டும் விதிவிலக்கு செய் திருக்கும் அதிகாரிகள் எண்ணெய் ஸ்நானத்திற்கு மறுப்பது ஏனென்று தெரியவில்லை.

சுருட்டு, பீடி, சாராயம் முதலியவைகள் லாகிரி வஸ்துக்கள். கைதி களுக்கு அவைகளைக் கொடுக்க அதிகாரிகள் மறுப்பார்களானால் அதை யாரும் ஆட்சேபனை செய்யமாட்டார்கள்.

ஆனால் எண்ணெயும், சீக்காய்த் தூளும் லாகிரி வஸ்துக்களல்ல. அவை கள் இந்துக்களுடைய சுகாதாரத்துக்கும் சமூகக் கொள்கைக்கும் மிகவும் அவசியமானவை.

அவைகளை அதிகாரிகள் மறுப்பதென்பது ஹிந்துக்களின் சமூகக் கொள்கைகளையே தகர்த்தெறிவது போலாகும்.

அப்படி யிருந்தும் அலிப்புரம் சிறையில் எண்ணெய் ஸ்நானத்துக்கு அனுமதி கொடுக்காதது அதிகாரிகளின் அறியாமையையும், பிடிவாதத்தையுமே குறிக்கிறது.

விருந்துக்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் கொடுத்து விட்டு அரிசியை மட்டும் கொடுக்காமல் விட்டு விட்டால், விருந்து எப்படிப் பூர்த்தியாகும்?

அதேபோல் தீபாவளிப் பண்டிகைக்கு வேண்டிய சகல சாமான்களையும் கொடுத்து விட்டு, எண்ணெய் ஸ்நானத்துக்கு மட்டும் தடை செய்தால் பண்டிகை பூர்த்தியாவது எந்த விதத்தில்?

ஸ்ரீ ஹௌளவ் மிகவும் கண்டிப்புக்காரர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். கண்டிப்புக்காரர்களிடம் பகுத்தறிவு இருக்கக் கூடாது என்பது நியதியில்லை.

ஸ்ரீ ஹௌளவ்வுக்கு தீபாவளி முக்கியமில்லா திருக்கலாம். ஆனால் இந்துக்களுக்கு தீபாவளிதான் முதன்மையான பண்டிகை. அலிப்புரம் சிறையிலுள்ள கைதிகள் தீபாவளியைக் கொண்டாடாமல் செய்ய ஸ்ரீ ஹௌளவ் தடை செய்வது மிகவும் வருந்தத் தக்க செயலேயாகும்.

ஸ்ரீ ஹௌளவ்தான் அப்படிப் பொருத்தமில்லாத காரியத்தைச் செய்து விட்டாலும், சென்னை சர்க்காராவது இதை கவனித்து அலிப்புரம் சிறையில் இருக்கும் கைதிகளுக்கு எண்ணெய் ஸ்நானத்துக்கு அனுமதி கொடுத்து எல்லோரையும் போல் அவர்களையும் பண்டிகை கொண்டாடச் செய்வார்கள் என நம்புகிறோம்.

ஆயுர்வேத வித்வான் **B. V. பண்டிட்** அவர்களின்

பல் உபாதைகளைக் கண்டிப்பதில் நிகரற்றது.

உதவி வைத்தியர் **டாக்டர் P. S. C. மணி**

சோல் ஏஜண்ட்ஸ்:— **யுனைடெட் கன்சர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.**

அன்பார்ந்த சகோதரிகளே !

நான் ஒரு மருத்துவப் பெண்ணுமல்ல, டாக்டருமல்ல அல்லது வைத்தியம் தெரிந்தவளுமல்ல. ஆனல் தங்களைப்போல் ஒரு சாதாரண குடும்பப் பெண்ணே.

என் கலியாணம் ஆன ஒரு வருஷத்திற்கு பின், என் கால வித்தியாசத்தினல் **பெரும்பாடு** என்ற கொடிய வியாதியால் ரொம்பவும் கஷ்டப்பட்டேன். நாளுக்கு நாள் அவ்வியாதி விருத்தியடைந்து எனது திரேகம் எலும்புக் கூடாகி, உடம்பு வெளுத்து, தலை கிறுகிறுப்பு, வீட்டு வேலைகளில் அருவருப்பு முதலியன உண்டாயிற்று. எவ்வளவோ மருந்து சாப்பிட்டு கடுகளவும் குணமடையாமல் இரண்டு வருஷ காலம் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

நிற்க, ஒருநாள் என் வீட்டிற்கு வந்த மகாத்மாவிடம் என் வியாதியின் முழு விபரங்களையும் தெரிவிக்கவே அவர் எனது கணவரைக் கூப்பிட்டு ஒரு ஔஷத முறையைக் கற்பித்தார். அம்முறையை நான் 15 நாட்கள் உபயோகித்ததும் எனது வியாதி அடியோடு அறுக்கப்பட்டு அநேக குழந்தைகளைப் பெற்று மகிழ்ந்தேன். சகோதரிகளே ! இம்மருந்தை யாதொரு விதமான சொந்த லாபத்தை கருதாமல் இவ்வியாதியால் கஷ்டப்படும் சகோதரிகளுக்கு நானே இம்மருந்தை தயாரித்து V.P.P. மூலம் அனுப்பி வைக்கிறேன்.

15 நாட்கள் உபயோகிக்கக்கூடிய மருந்து கிரயம் ரூ. **3—3—0.**
தபால் சிலவு பிரத்தியேகம்.

முக்கிய கவனிப்பு :—இவ்வியாதி ஒன்றுக்கேதான் மருந்து தயாரிப்பதால் மற்ற வியாதிகளைப்பற்றி எனக்கு எழுதாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

RAJ KUMARI VERMA, (C.T.M.) Jullundur City.

புரளி விளம்பரம் பார்த்து பிரமிக்க வேண்டாம்

தீபாவளிக்கு

வேண்டிய சேலைகளுக்கு விரும்பி வருக !

N.C.B. கார்னர் ஷாப்

N.C. பாலுசாமி அய்யர் & சன்,

84, நயினியப்ப நாய்க்கன் தெரு, — பி. டி. மதராஸ்.

புதிய புத்தகசாலை

கல்விக்கு தெய்வம் சரஸ்வதி. சரஸ்வதியை வணங்கும் பொருட்டு வருடத்தில் ஒரு நாளில் சரஸ்வதி பூஜை செய்கிறோம். சென்ற 30-9-'41-ல் தமிழர்கள் வழக்கப்படி சரஸ்வதி பூஜை செய்தனர்.

சென்னை சக்தி காரியாலயத்தின் சொந்தக்காரரான ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களும் அன்று சரஸ்வதி பூஜை செய்தார். ஆனல் மற்றவர்கள் செய்த பூஜைக்கும், அவர் செய்த பூஜைக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கின்றன.

அன்றைய தினம் எல்லோரும் அவரவர்களுக்கு கல்விச் செல்வத்தை அருளவேண்டு மென்று சரஸ்வதியை வேண்டியிருக்கலாம். ஆனல் ஸ்ரீ கோவிந்தன் அவர்கள் தனக்காக மட்டும் பூஜை செய்யவில்லை. தமிழ் நாட்டு மக்கள் அவ்வளவு பேருக்கும் கல்விச் செல்வம் பெருகவேண்டும் என்று சரஸ்வதியிடம் முறையிட்டிருக்கிறார்.

சரஸ்வதி பூஜையன்று தமிழ் மக்களுக் கென்று அவர் சக்தி காரியாலயப் புத்தகசாலை என்ற ஒரு அழகிய புத்தகசாலையை அமைத்ததுதான் அதற்கு அத்தாட்சியாகும். கல்வியென்ற கண்களைப் பெற்ற நம் தமிழர்கள் தம் கண்களுக்கு இதுவரை நல்ல விருந்து கிடைக்க வில்லையே என்று ஏங்கியிருக்கலாம்.

அவர்களுடைய ஏக்கத்தை யெல்லாம் ஒரு புத்தகசாலையை ஏற்படுத்தி யதில் ஸ்ரீ கோவிந்தன் அகற்றி விட்டார் என்றே கூறலாம்.

சக்தி காரியாலயத்தார் தமிழ்த் தொண்டுக்கென இதுவரை பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றனர். ஷை புத்தகசாலையில் அவர்களுடைய வெளியீடுகள் தவிர தமிழ் நாட்டிலுள்ள எல்லா நல்ல புஸ்தகங்களும் நிறைந்திருக்கின்றன.

எனவே இனிமேல் படிப்பதற்கு நல்ல—சுவையுள்ள—அழகிய புத்தகங்கள் வேண்டுவோர் சென்னை ஹைகோர்ட்டுக் கெதிரே 367—ம் நம்பர் கட்டிடத்தின் மாடிக்குள் நுழைந்தால் போதும். அவர்களுடைய விருப்பம் பூர்த்தியாய்விடும்.

இப் புத்தகசாலையை புனித தினமான சரஸ்வதி பூஜையன்று திறந்து வைத்தவர் தமிழ்ப் பெரியாராகிய திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களாகும். தமிழர்களுக்கும், தமிழ்த் தாய்க்கும் சலியாத தொண்டாற்றி வரும் ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களுக்கு தமிழ்த்தாயின் அருளால் சகல போக பாக்யங்களும் சித்திக்க வேண்டுமென்று வாழ்த்துவது நமது கடமையாகும்.



சக்தி காரியாலயத்தின் சொந்தக்காரரான

ஸ்ரீ வை. கோவிந்தன்.

காந்தி ஜயந்தி

உலகிலே தர்மம் குறைந்து அதர்மம் மேலோங்கும் சமயத்தில் தாம் அவதரித்து உலகிலே தர்மத்தை நிலை நாட்டுவதாக கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறியிருக்கிறார்.

இப்பொழுது உலகில் அதர்மம் ஓங்கியிருக்கிறது. தர்மத்தைக் காணோம். பலாத்காரம், பேராசை, சுயநலம் வஞ்சனை, சூது, கொலை, திருட்டு முதலிய கொடிய செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. யுத்தப் பேயோ உலகில் ரத்த ஆறுகளை ஓடச் செய்துகொண்டிருக்கிறது.

இந்த சமயத்தில் இவைகளையெல்லாம் போக்கி தர்மத்தை நிலை நாட்ட கிருஷ்ணபரமாத்மா அவதரித்திருக்கிறாரா என்று சிலர் சந்தேகிக்கலாம். ஆனால் அப்படியாரும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

தர்மத்தை நிலைநிறுத்த நம் நாட்டில் பரமாத்மா அவதரித்துத் தான் இருக்கிறார். அவர்தான் மகாத்மாகாந்தி. அவரே கடவுளின் அவதாரம்.

அஹிம்ஸையும், தர்மமும் சாந்தமும், கருணையும் உருவாய் வந்த காந்திஜீ அவதரித்து இம்மாதம் 2-ந் தேதியுடன் சரியாக 73 ஆண்டுகள் நிறைந்து விட்டன.

இதுவரை அவர் நம் நாட்டு விடுதலைக்காகச் செய்த தியாகங்களுக்கும், ஆற்றிய பணிகளுக்கும் ஒரு எல்லை கிடையாது. இன்னும் அவர் இரவு பகலாக மானிட விடுதலைக்கே தன் சக்திமுழுதையும் செலவிட்டுவருகிறார்.

உலகிலே தர்மம் செழித்தோங்க பலாத்காரப் போர் கூடாது என்பதும் சத்தியப் போராலேயே அது சாத்தியமாகுமென்பதும் காந்தியின் நம்பிக்கை. தன் நம்பிக்கையின் மூலம் உலகத்திற்கு வழிகாட்டவே இப்பொழுது அவர் சாத்மீகப் போரை ஆரம்பித்திருக்கிறார்.

பாரத தேசம் உய்வதற்காக அருந்தொண்டாற்றிவரும் மகாத்மாவின் பிறந்த தினம் இம்மாதம் 2-ந் தேதியாகும். இத் தினத்தை இந்தியர்கள் ஒரு சுபதினமாகக் கொண்டாடியதில் வியப்பொன்றுமில்லை. கடவுளின் அவதாரமென்று கருதப்படும் அவர் தினத்தை 'காந்தி ஜயந்தி' என்று ஹிந்துக்கள் யாவரும் கொண்டாடியது அன்றையதினம் ஒரு பெரிய இந்திர விழாவைப் போலவேயிருந்தது.

இனியும் பல்லாண்டுகள் அவர் வாழ்ந்திருக்கவும், அவர் ஜயந்தியை நாம் கொண்டாடவும் கடவுள் கிருபை செய்யட்டும். அத்துடன் காந்திஜியின் தியாக ஜோதியால் இந்தியாவின் விடுதலையிருள் வெகு விரைவில் விலகட்டு மென்றும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

பஞ்சாயத்து மசோதா

இப்பொழுது சென்னை சர்க்கார் பஞ்சாயத்துகளின் திட்டத்தை திருத்தியமைப்பதற்காக ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். அந்த மசோதாவை சென்ற மாதம் 16-ந் தேதியன்று பிரகடனம் செய்திருக்கின்றனர். அதன் தமிழ்ப் பிரதி அக்டோபர் மாதம் 7-ந் தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவிலே ஏதாவது ஆட்சேபனை சொல்ல இடமிருக்குமானால், அதை அக்டோபர் 17-ந் தேதிக்குள் பொது ஜனங்கள் கவர்ன்மென்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று சர்க்கார் அறிக்கையிலும், மசோதாவிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மசோதாவின் தமிழ்ப் பிரதி சென்னைவாசிகளுக்கே இம்மாதம் 10-ந் தேதி தான் விலைக்குக் கிடைத்திருக்கிறது. கிராம ஜனங்களுக்கு இன்னும் தாமதத்தின் பேரிலேயே கிடைத்திருக்கு மென்பது நிச்சயம்.

இம்மசோதாவை கிராம ஜனங்கள் படித்துப் பார்த்து யோசிக்க வேண்டுவது மிகவும் முக்கியமானது. ஏனெனில் இதில் சாதகங்களை விட பாதகங்களே அதிகமாக இருக்கின்றன.

மசோதாவைப் பற்றிய அபிப்ராயத்தைச் சொல்வதற்கு இப்பொழுது கொடுத்திருக்கும் காலம் மிகக் குறுகியதாக இருக்கிறது.

கிராம ஜனங்கள் மசோதாவை நிதானமாகப் படித்து யோசிக்க இன்னும் அவகாசம் வேண்டும்.

எனவே சர்க்கார் அபிப்ராயத்தைத் தெரிவிக்க பொது ஜனங்களுக்கு இன்னும் இரண்டு மாதங்களாவது தவணை கொடுப்பது உசிதமாகும் என்று கருதுகிறோம்.

சிரித்துப் பார்

காரணம்.

கந்தன்:—இவ்வளவு சத்தத்திலும் இவர் எப்படி சகித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறுர்? ஒருவேளை இவர் செவிடா யிருக்கலாமோ?

சுப்பன்:—இல்லை இல்லை. இவர் பாட்டு வாத்தியார்!

அவஞ குரங்கு?

நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு நாள் இருநண்பர்கள் கடற்கரையில் சந்தித்துக் கொண்டார்கள்.

“இப்பொழுது என்னை நீ மறந்து இருக்கலாம்...”

“என்ன அப்படிச் சொல்கிறுய்? நீ எங்கள் வீட்டுச் சுவரில் உன் சிறு வயதில் எழுதிய அந்த சித்திரத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், உன்னை நான் நினைத்துக் கொள்கிறேன்.... உன்னை நான் மறக்க முடியுமா?”

“சந்தோஷம். அது என்ன சித்திரம்?...மறந்து விட்டேனே”

“அது தானப்பா, தாவுங் குரங்கு!”

யார் பேய்?

ஒரு நாள் ரேடியோவில் அறிவிப்பாளர் பின் வருமாறு கூறினர்.

நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று நடைபெறவிருந்த ‘பேயின் அலறல்’ என்னும் நிகழ்ச்சிக்குப் பதிலாக, ஸ்ரீமதி கோகர்ணம் அடுத்த நாற்பது நிமிஷங்களுக்குப் பாடக் கேட்பீர்கள்!

பாட்டு எப்படி

சினிமா நடிகை:—‘சனிலீலா’ வில் கதாநாயகியாக நடிப்பவர் முழுக்க முழுக்க அழுது தொலைக்க வேண்டுமாமே, அப்படித்தாஞ?

டைரக்டர்:—ஆமாம்.

நடிகை:—பின் என்னை ஏன் அதில் கதாநாயகியாகப் போட்டீர்கள்?

டைரக்டர்:—எல்லாம் உங்கள் பாட்டை உத்தேசித்துத் தான்!

தும்மல் பலன்

ஹோட்டலுக்கு வந்தவர்:—நான் வடையைக் கையில் வாங்கிக் கொள்ளும் போதே நீ தும்முகிறுய். என்ன நேரிடப் போகிறதோ?

ஹோட்டல் அம்பி:—உங்கள் கையிலுள்ள வடைக்குத் தான் சேதம் ஏற்படப் போகிறது!

அநுபவம்

ஒருவன்:—அதோ பிள்ளை யாரா மாதிரி ஒருவன் போகிறுனே, அவன் தான் பேர்பெற்ற சினிமாநடிகை சம்பங்கியின் கணவன்.

மற்றவன்:— ஓ! அதுதான் அவள் ‘காட்டுதேவதை’ என்ற படத்தில் அவ்வளவு தைரியமாக அந்த யானையை அடக்கி ஆள்கிறுள்!

வாக்குத் தவறுதல்

புடவை வியாபாரி:— கீழவீதி அய்யர் ‘மூன்று மாதத்தில் கொடுத்து விடுகிறேன்’ என்று சொல்லி என்னிடம் ஒரு புடவையைக் கடனுக்கு வாங்கினர். மாதம் ஆறு ஆகிவிட்

டது. இன்னும் பணம் வரவில்லை. இப்பொழுது தானே எனக்குத் தெரிகிறது, அவர் வாக்குத் தவறுகிற பேர்வழி என்று.

ஹாஸ்யப் பிரியர்:—அடபாவமே, உலகம் முழுவதும் அறியுமே, அவருக்கு கொஞ்சம் தத்துவாய். வாக்கு சுத்தமிராது என்று. இப்பொழுதுதானு உனக்குத் தெரிந்தது?

காரணம் எப்படி

ரஸிகன்:—நேற்று மாலை 'ஆனந்த ஹாலில்' ஒரு புதிய சினிமா நடிகையின் பாட்டுக் கச்சேரி நடந்தது. எஅப்பா! எவ்வளவு கூட்டம் அதற்கு! கடைசியில் அவள் பாட்டைக் கேட்கப் போனுலோ, மனுஷன் கேட்டு சகிக்கக்கூடிய பாட்டாய் இல்லை அது!

குறும்பன்:— கூட்டம் கட்டுக் கடங்காமல் போய் விட்டது என்று அவள் அப்படிப் பாடியிருக்கலாம்.

எது உயர்ந்தது?

தாத்தா:— நேற்று கோவிலில் உயர்ந்த மேளக் கச்சேரி நடந்ததாமே, போயிருந்தயா? நாயனம் எப்படி உயர்ந்ததுதானு?

பேரன்:—ஆமாம் தாத்தா! உயர்ந்த நாயனந்தான். முழுக்க முழுக்க தங்கத்தினுல் செய்யப் பட்ட நாயனத்தானும்!

ரூ. 500 இனும்.

சித்த வசீகர யந்திரம் :—அதிக சக்தியும், மஹிமையும் வாய்ந்தது. இதை வைத்துக்கொள்வதால் அடைய முடியாதவைகளையெல்லாம் அடைந்து விடலாம். இதற்குச் சக்தியைக் கொடுக்க வேறு எவ்விதக் கஷ்டமும் படவேண்டியதில்லை. இந்த யந்திரத்தின் அற்புத சக்தி, நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்களை உங்கள் கைக்குக் கிட்டச்செய்யும். அவர்கள் பிறகு உங்களை விட்டு பிரியமாட்டார்கள். இது கிரஹக் கோளாறுகளை மாற்றி எதிரிகளைப் பணியச் செய்து, பரீட்சையிலும், வியாபாரத்திலும், லாட்டரியிலும், பந்தயங்களிலும், உத்தியோகத்திலும், ஐச்வர்யம் பெறுவதிலும் வெற்றி அளிக்கவல்லது. சிசுக்களை வியாதிகளினின்று காப்பாற்ற தாய்கள் இதை அணிந்து கொள்ளலாம். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்க ஆரம்பித்தாலும் இதனுடைய சக்தி என்றும் மாருதிருக்கும். குரு மஹாராஜ் தம்முடைய வாழ்க்கையில் அனுபவ முறையில் கண்டுபிடித்த யந்திரம். விலை ரூ. 1/8. போஸ்டேஜ் மாத்திரம் பிரத்தியேகம். 3 யந்திரங்கள் விலை ரூ. 3/12. தபால் சார்ஜ் இனும். ஸ்பெஷல் சக்திவாய்ந்த யந்திரம் விலை ரூ. 4/-. தபால் சார்ஜ் அணு 7.

மிஸ்டர் D. R. D. சான்ஸர் பரோடாவிலிருந்து எழுதுகிருர் :—இந்த யந்திரத்தை வைத்துக்கொண்ட மாத்திரத்தில் எல்லா காரியத்திலும் வெற்றியடைந்து விட்டேன். நான் பழைய கவசத்தை கெட்டுப் போக்கிவிட்டதால் உடனே ஸ்பெஷல் யந்திரம் அனுப்பவும். இதை பொய்யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனுமாக அளிக்கப்படும்.

Shri Guru Maharaj Bhardwaj Jyotish Ashram (648)
KALOWANI STREET, :: JULLUNDUR CITY

பார்வைக்கு வந்தவை

தென்னாட்டு வள்ளல் ராஜா சர் அண்ணாமலை

தமிழிசைக் கழகம், ராயப்பேட்டை சென்னை.

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் தர்மத்தில் சிறந்த வள்ளல்கள் இருந்தார்கள் என்பதைக் காதால் கேட்டிருக்கிறோம். புத்தகங்களில் படித்திருக்கிறோம்.

ஆனால் இதுவரை அப்படிப்பட்ட வள்ளல் ஒருவரை நாம் கண்ணால் கண்டதில்லை. இது ஒரு பெருங்குறைதான். நம் காலத்தில் நமக்கு முன்பு, ஒரு வள்ளல் இருக்கக்கூடாதா என்று நாம் குறைபடுவது இயற்கையே.

ஆனால் இப்பொழுது நமக்கு அந்தக் குறை இல்லையென்றாய் விட்டது. நம் தலைமுறையிலேயே நம்முடன் ஒரு வள்ளல் இருக்கிறார் என்ற விஷயம் இப்பொழுது நமக்குத் தெரிந்துவிட்டது.

அந்த வள்ளல்தான் செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள். அந்தக் காலத்திலே ஒரு கர்ணன் இருந்தான். இந்தக் காலத்துக்கு ராஜா சர் அவர்கள் கர்ணனாக விளங்குகிறார். இவர் செய்த தானதருமங்கட்கு ஒரு வரம்பே கிடையாது எனலாம்.

இப்படிப் பட்ட ஒரு வள்ளலைப்பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். அதற்காகவே சென்னை தமிழிசைக் கழகத்தார் அவருடைய அரும் பெரும் சரிதத்தைப் புத்தகமாக வெளியிட்டிருக்கின்றனர்.

ராஜா சர் அவர்களின் பெருமைக்குத் தக்கவாறே புத்தகமும் மிகக் கவினுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ. எம். என். முத்துக்குமாரசாமிப் பாவலர், அவர்களை அறியாத தமிழர் அனேகமாய் இருக்க முடியாது. அவர்தான் இந்த அரிய சரிதத்தை எழுதி நமக்கு உதவியிருக்கிறார்.

அவருடைய நடையும், சொல்திறமையும் வெகு அழகாக இருக்கின்றன. ராஜா சர் அவர்களின் இச் சரிதத்தை எல்லோரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

வள்ளல் ராஜா சர் அண்ணாமலை—இசை யமுதக்காட்சி

ஷை தமிழிசைக் கழகத்தாரே இந்த நூலையும் வெளியிட்டிருக்கின்றனர். இதைப் பாவலர்தான் எழுதியிருக்கிறார்.

ராஜா சர் அண்ணாமலை அவர்களின் பிரபாவத்தை தலைவி—பாங்கி என்ற இருவரின் வாயிலாக அழகிய பாட்டுகளைக் கொண்டு பாவலர் சித்தரித்துத் தன் திறமையைக் காட்டியிருக்கிறார். இதையும் தமிழர்கள் படிப்பது நலம்

நவமணி

ஆசிரியர்: எம். ராமலிங்கம், அலெக்ஸாண்ட்ரா ரோட், வெள்ள வத்தை, சிலோன்.

'நவமணி' என்ற நவீனம் ஒன்று வரப்பெற்றோம். இக் கதை நாடகத் திற்கு ஏற்றவாறு எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர், சிறந்த முறையில், தெளிவான நடையில் அழகிய வசனங்களால் இதை எழுதியிருப்பதைக் கொண்டு இவருக்குத் தமிழில் நல்ல ஞானமும், நாடகத்தில் போதிய அனுபவ மும், உலக அறிவும் நிறைய இருக்கிற தென்பதை அறியலாம். இக்கதை நாடக மேடைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்வதே நாடகாபிமானிகளின் கடமை.

—" தேனீ "

இங்கே கவனியுங்கள்

உங்கள் காலத்தையும், பலத்தையும், பணத்தையும் மற்றவர்களுடன் கலந்து பேசி ஏன் வீண் செய்கிறீர்கள். எங்களுடைய **மாயக் கண்ணாடியின்** உதவியால் நீங்களே எஜமானாகி விடுவீர்கள். இந்த மாயக் கண்ணாடி கைலாசத்திலுள்ள உயர்ந்த மூலிகை யைக் கொண்டு தயார் செய்யப்பட்டது. இதன் சக்தியைக் கண்டால் நீங்கள் ஆச்சர்யமடைவீர்கள். நீங்கள் ஆணா யிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, எத்தனை வயதானவர்களானாலும் சரி, எந்த ஜாதியாயிருந்தாலும் சரி ஜோதிஷர் உதவியை நாடா மலே நடந்தவைகளையும், நடக்கப்போவதையும் கண்டறியலாம். இதைக் கொண்டு இறந்துபோன பந்துக்களுடனும் சிநேகிதர்க ளுடனும் கூட பேசலாம். உங்களுக்கு சிநேகமுள்ளவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பார்க்கமுடியும். இதை வைத்துக் கொண்டால், யுத்தத்தில் வெற்றி, வியாபாரம், கலியாணம் முதலியவைகளில் வெற்றி யடையலாம். புதையல் இருக்குமிடத் தையும், கெட்டுப்போன சாமான்களும், அதிர்ஷ்ட நம்பர்களும் கண்டு பிடிக்கலாம். இது உலகத்திற்கு ஒரு உண்மையான சிநேகிதன். **விலை ரூ. 2/8. ஸ்பெஷல் ரூ. 4/8.** போஸ்ட்டேஜ் தனி. இன்றே ஒன்றுக்கு எழுதுங்கள். பர்மா, சிலோன் வாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். பலனில்லையேல் பணம் வாபீஸ்.

BENGAL MAGIC HOUSE, (CTM) Jullundur City.

★ நக்ஷத்திர உலகிலே ...

''தேனீ''

● தமிழிலே ஒரு கண்ணகி பிறக்கப் போகிருள் என்ற ஒரு செய்தி முன்பு கிடைத்தது. ஆனல் அதே கண்ணகி தெலுங்கு பேசினல் எப்படியிருக்கும் என்று நான் நினைத்தேன்.

அதற்கேற்ருற்போல் தெலுங்கிலே யும் ஒரு கண்ணகி வரத்தான் போகி ருள் என்று தேனீக்கு இப்பொழுது செய்தி கிடைத்திருக்கிறது.

ஆனல் இந்தத் தெலுங்கு கண்ண கிக்கு 'பத்தினி' என்று பெயர் வைத் திருக்கின்றனர் சாரதி பிலிம்ஸ் கம் பெனியார். சிலப்பதிகாரத்தை அடிப் படையாகக்கொண்ட இவர்களுடைய இந்தப் பத்தினியின் ஆரம்ப வேலை கள் சென்னை நியூடோன் ஸ்டுடியோ வில் சென்ற மாதம் 30-ம் தேதி நடந் ததாகத் தெரிகிறது.

இப்படத்தில் ஸ்ரீமதி ராஜ்யம், ருஷ்யேந்திரமணி, அன்னபூர்ண, ஸ்ரீ பிரகாஷ் ராவ், முதலியவர்கள் நடிக் கிருர்களாம். இப்படத்தை, டைரெக் டர் ராமப்ரும்மம் வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்தார்.

● 'அங்கே சாவித்திரி ஓடுகிருள், இங்கே சாவித்திரி நடக்கிருள்' என் றெல்லாம் விளம்பரங்கள் கூறுவதைக் கண்ட நான் நமது சென்னையிலே எப்பொழுது அந்த சாவித்திரி ஓடி நடந்து விளையாடப் போகிருள் என்று ஏக்கங் கொண்டிருந்தேன்.

எனது ஏக்கத்தைப் போக்கத் தானே என்னமோ தீபாவளி சமயத் தில் சாவித்திரி சென்னை பிரபாத் டாக்கீஸில் ஓடப்போகிருள் போலிருக்கிறது.

வரட்டும்; அவள் ஓடினலும் சரி, நடந்தாலும் சரி; நான் மட்டும் அவ ளைப் பார்க்க ஓடுவது நிச்சயம்.

● 'உத்தமி' என்ற தமிழ்ப் படத்தின் ஷூட்டிங் சமீபத்தில் நடந்ததாகத் தெரிகிறது. சாயா பிக்சர்ஸாரும், பாரத்மூவிடோனும் சேர்ந்துதான் இப்படத்தைப் பிடிக்கப் போகிருர் களாம். இந்த உத்தமியில் உத்தமி பாத்திரங்களாக எம். லக்ஷ்மணனும், எம். லக்ஷ்மியும் நடிப்பார்களென்று தெரிகிறது. ஜோடி பொருத்தந்தான்.

● சினிமா உலகிலே போட்டிப் படங்கள் வரவர அதிகமாய் விட்டன. இப்பொழுது இப்படப் போட்டியில் காரைக்காலம்மையார் அகப்பட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

அந்த அம்மையைப் பிடித்து அம் பலத்தில் நிறுத்தும் போட்டியில் நியூ ஈரா பிக்சர்ஸ், பீ ஸ ஸ் பி க் ச ர் ஸ், கொண்டித்தோப்பு சாரதாம்பாள் முத லியவர்கள் பங்கெடுத்துக் கொண் டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனல் பீஸஸ் பிக்சர்ஸார் இவர் களை முந்திக்கொண்டு அம்மையாரின் கதையைப் படமா யெடுக்க ஆரம்ப விழாவைக்கூட நடத்தி விட்டார் களாம்.

இதைக் கண்ட மற்ற இருவர்களும் காரைக்காலம்மையாரைக் கைவிட்டு விடுவார்களா, மாட்டார்களா என்ப தைப் பார்க்க ரஸிகர்கள் போட்டியிட் டாலும் இடலாம்.

● 'தாறுமாறு' என்றவுடன் படமும் அப்படித்தான் இருக்குமென்று எண்ணிவிடாதீர்கள். இது ஒரு தெலுங்கு ஹாஸ்யப்படம். இதை ஜகனத் புரொடக்ஷன்ஸார் தயாரித் திருக்கின்றனர்.

சென்ற மாதம் இப்படத்தின் வியா பாரக் காட்சி வெலிங்டன் டாக்கீஸில் நடைபெற்றது.

ஒரு ஆணுக்குப் பெண் குரலும், ஒரு பெண்ணுக்கு ஆண் குரலுமாக தாறுமாறாக மாறி விடுகிறது. இதைத்தான் இப்படத்தில் ஹாஸ்யமாகக் காட்டுகின்றனர். படம் ரஸிக்கக் கூடியதாக இருக்கிறது.

● 'சினிமா சாட்டை' யிடம் சாட்டையடிபட்ட 'தேனீ'க்கும், சந்திரோதயம் தேனீக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று ஒரு இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

இப்பொழுது ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் ஒரு 'தேனீ' கட்டுரை எழுதியிருக்கிறது. அதைக் கண்ட சில வாசகர்கள் இந்தப் புதுத் தேனீக்கும், சந்திரோதயம் தேனீக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா என்று கடிதம் எழுதியிருக்கின்றனர்.

வேறு பத்திரிகைகளில் உலாவும் தேனீக்களுக்கும் சந்திரோதயம் 'தேனீ'க்கும் ஸ்நானப்ராப்தி கூடக் கிடையாது என்பதையும், இப்பொழுது மழைக்காலமானதால் தங்க இடமின்றி சில தேனீக்கள் பறப்பது சகஜந்தானென்பதையும் "தேனீ" என்ற பெயர் இனிமையாயிருப்பதால் ஒரு வேளை சிலர் அந்த 'தேனீ' என்ற போர்வைக்குள் புகுந்துகொள்வதும் இயற்கைதானென்பதையும் கடிதம் எழுதிய வாசகர்களுக்கு அறிவித்துக்கொள்கிறோம்.

● திருக்குறளை எல்லோரும் படித்திருக்கின்றனர். ஆனால் அதன் கர்த்தாவான திருவள்ளுவரை இதுவரை யாரும் கண்டதில்லை. அந்தக் குறையைத் தீர்ப்பதற்காகத்தான் விஜய மாருதி பிக்சர்ஸார் முயற்சி செய்து, இப்பொழுது அவரை வெலிங்டன் டாக்கீஸில் எழுந்தருளச் செய்திருக்கின்றனர். திருவள்ளுவர் தரிசனத்திற்குக் காத்திருந்த ரஸிகர்கள் இப்பொழுது வெலிங்டன் டாக்கீஸுக்கு செல்லட்டுமென்று சிபார்ஸு செய்கிறோம்.

இதே விஜயமாருதியாரின் 'சீதா ஜனனம்' கிரௌன் டாக்கீஸில் 4-வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

● தமிழ் நாட்டில் வெற்றி முரசு கொட்டிவரும் ராஜா சாண்டோவின் டைரக்ஷனில், அநேக படங்களில் நடித்து அனுபவம் வாய்ந்த உன்னத நடிக நடிகைகளைக் கொண்டு சென்னையிலுள்ள ஒரு பிரபல ஸ்டுடியோவில் ஒரு சமூகப் படத்தை எடுப்பதற்கான ஏற்பாடுகளை ராஜா சாண்டோவின் உதவி டைரக்டரான T.K. மாரியப்பன் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

இந்த ஸ்ரீமதி அம்மாள் பார்க்கும் தினுசைப் பார்த்தால் சினிமா உலகையே தன் பார்வைக்குள் அடக்கி விடுவார் போல் தோன்றவில்லையா? கௌஸல்யா என்ற இந்தப் பெண்மணி இதுவரை சன்யாசி, ராஜஸூயம், மதனகாமராஜன், சீதா ஜனனம், தல்வி பிரேமா, நந்தகுமார் முதலிய படங்களில் திறமையுடன் நடித்திருக்கிறார்.

இப்பொழுது தன் திறமையைக் காட்ட அடுத்த நல்ல படம் எதுவரப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் இப் பெண்மணி.

தரும ராஜன்

இப்படத்திலே காட்சி யளிப்ப வர்களைக் கண்டால் அரச தம்பதிகள் போல் தோன்றுகிற தல்லவா! ஆம், இவர்கள் அரச தம்பதிகள் தான். ஆனால் இவர்கள் எந்த தேசத்தையும் ஆளவில்லை. மற்ற அரசர்களெல்லாம் வெறும் தேசங்களையும், ஜனங்களை யுந்தான் ஆண்டு வருகின்றனர். அவர்களெல்லாம் முடியாத ஒன்றை இத்தம்பதிகள் ஆண்டு வருகின்றனர்.

அதாவது மற்றவர்களாலெல்லாம் சாதாரணமாக அடக்கியாள முடியாத தருமத்தை இவர்கள் முறையுடனும் நீதியுடனும் ஆண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் படத்தில் காணும் தரும ராஜாவின் பெயர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் என்பதாகும். 'தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலார், தோன்றலில் தோன்றாமை நன்று' என்ற குறளின் வாக்கிற்குத் தக்கப்படி புகழொடு தோன்றியவர் ராஜா சர் அவர்களாகும்.

அண்டினோர்க்கு அபய மளிப்பதிலும், இல்லையென்னாது தருமம்

செய்வதிலும் நம் பாரததேசம் முதன்மை வாய்ந்தது. அதிலும் நம் தமிழ் நாடு, தருமத்தில் உலகிலேயே திலகம் போல் விளங்கி வந்தது என்று கூறலாம்.

குமணன், பாரி, கர்ணன் போன்ற கொடைவள்ளல்கள் நம் தமிழ் நாட்டிலே தான் அவதரித்தனர். அப்படிப்பட்ட வள்ளல்கள் தோன்றிய இத் தமிழ் நாட்டில் இப்பொழுது ஒரு வள்ளலும் இல்லை என்று ஏக்க முறுவதைத் தடுப்பதற் கென்றே நம் தென்னுட்டில் நமது ராஜா சர் அண்ணுமலையவர்கள் அவதரித்தனர் என்று கூறலாம்.

அளவற்ற குபேர சம்பத்து கிடைப்பது அரிது அப்படிக் கிடைத்தவர்களுக்கோ தரும சிந்தனை உண்டாவது அதனினும். அரிது ஆனுல் ராஜா சர் அவர்களுக்கு குபேர செல்வமும், அதற்கேற்ற தரும குணமும் ஒருங்கே பொருந்தியிருக்கிறது.

அது தென்னுடு செய்த புண்ணியமேயாகும். அதிலும் ஒரு தரும வள்ளலை அளித்த பெருமை முக்கியமாய் செட்டிநாட்டையும், செட்டிமார் சமூகத்தையும் சார்ந்ததாகும்.

கொடைக்குக் கர்ணன் என்று கூறுகிறுர்கள். ஆனுல் அந்தக் கர்ணனை நாம் கண்ணுல் கண்டதில்லை. ஆயினும் நம் ராஜா சர் அவர்களை இப்பொழுது நாம் காணுகையில் கர்ணன் இவரைக் காட்டிலும் ஒன்றும் சிறப்பாக இருந்திருக்க மாட்டான் என்று நிச்சயம் எண்ணத் தோன்றுகிறது.

கல்வி ஸ்தாபனங்கள், ஆலயங்கள், பொதுஸ்தாபனங்கள், அநாதை விடுதிகள், முதலியவைகளுக்கும் ராஜா அவர்கள் செய்த நன் கொடைகள் அளவிட்டுக் கூறமுடியாதது. நன் கொடை யென்றுல் அல்பசொல்பமில்லை. அவர் செய்த நன்கொடைகளெல்லாம் ஆயிரக் கணக்கிலும், லட்சக் கணக்கிலும்தான் மதிப்பிடக் கூடியன. இது சாதாரணமாக எல்லோராலும் செய்யக்கூடியதல்ல. அது ராஜா சர் அவர்கள் ஒருவரால்தான் முடியும். அதனுலேயே யாருக்கும் கிடையாத தென்னுட்டு வள்ளல் என்ற பெயர் அவருக்குமட்டும் கிடைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட தாராளமான மனப்பான்மையும், தருமகுணமும், சாந்தமும், பொறுமையும் அமைந்த ராஜா சர் அண்ணுமலை அவர்களின் சஷ்டியப்தப் பூர்த்தி இவ்வருடம் புரட்டாசி ௴ 12-ம் தேதியன்று செட்டி நாட்டில் மங்களகரமாகவும் குதூகலமாகவும் நடந்தேறியது.

நம்நாட்டில் நாம் எத்தனையோ சஷ்டியப்த பூர்த்திகளைக் கண்டிருக்கிறோம். ஆனுல் இதைப்போல் நடந்ததை நாம் கண்டிருக்க மாட்டோம்.

ராஜா அவர்களின் சாந்திவிழா ஒரு இந்திர விழாவாகவே நடந்தது. விழாவுக்கு 50 ஆயிரம் பேருக்குமேல் விஜயம் செய்திருந்தனர்.

அவ்வளவு பேருக்கும் தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும், உல்லாசமாக சங்கீதத்தை அனுபவிப்பதற்கும் இடவசதிகளும், உணவு வசதிகளும் செய்திருந்த தோரணை எவரையும் பிரமிக்க வைக்கத் தக்கதாக இருந்தது.

சாதாரண நாட்களிலேயே செல்வத்தை அள்ளிவீச ராஜா அவர்களின் கைகள் பின்வாங்கிய தில்லை. அதிலும் அன்றையதினம் சொல்லவேண்டியதில்லை. 3½ லட்சம் ரூபாயை மீண்டும் தரும காரியங்களுக்காக நன்கொடை செய்திருக்கின்றார். இவரை வள்ளல் என்றுமட்டுமல்ல, மகா வள்ளல் என்றும் கூறலாம்.

ராஜா அவர்கள் ஒரு மகாபுருஷர்—கர்ம வீரர்—கலியுகக் கர்ணன்--தியாக மூர்த்தி—செல்வத்திலோ குபேரன் இவருடைய பெயர் வருங்கால சரிதத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

நமது வள்ளலின் அறுபது ஆண்டு வாழ்க்கையும், லட்சியமும் எல்லா வழிகளிலும் பிறருக்கு எடுத்துக் காட்டாக இருப்பது என்றும் மறக்க முடியாததாகும்.

இப்படிப்பட்ட ஒரு மகா வள்ளல் நம்காலத்திலே, நம் நாட்டிலே யிருப்பது நமது பூர்வ புண்ணியமாகும்.

இனியும் இவரும் இவர் பத்னியாரும், இவருடைய சந்ததியாரும் பல்லாண்டு குபேர சம்பத்துடனிருந்து நம் நாட்டுக்கு எண்ணற்ற நன்மைகள் புரிய அவர்களுக்கு தீர்க்காயுளும், திடகாத்திரமும் அளிக்க வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வழுத்துவோமாக

சந்திரோதயம்

வருஷ சந்தா

இலங்கை முதலிய
உள்நாடு ரூ. 2-0-0
வெளிநாடு ரூ. 4-0-0

ஆறுமாத சந்தா கிடையாது.

சந்தாத் தொகையை உள் நாட்டிலுள்ளோர், மணியார்டர் அல்லது போஸ்டலார்டர் மூலமும். வெளிநாட்டிலுள்ளோர் பிரிட்டிஷ் போஸ்டலார்டர் மூலமும் முன்பணமாக அனுப்பவேண்டும். இலங்கையிலுள்ளோர் இலங்கை போஸ்டலார்டர் வாங்கியனுப்பலாம். வி. பி. மூலம் அனுப்பப்பட மாட்டாது.

சந்தா மானேஜர்
சந்திரோதயம்
60, தம்புசெட்டி தெரு, சென்னை.

டேங்ரேயின்
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்

சலனமும் சப்தமும் :

ச ங் க மா லா

இரத்னபுரி அரசன் மரணவஸ்தையிலிருக்கையில், கர்ப்பிணியாயிருந்த அவன் மனைவியை ஒரு பெரும் பறவை தூக்கிக் கொண்டு போய் விடுகிறது.

ஆயினும் அரசன், காணமல் போன தன் மனைவிக்கு ஆண் மகவு பிறக்குமென்றும், பிற்காலத்தில் அவன் திரும்பி வருவானென்றும் நம்பி, அதுவரை தன் ராஜ்யத்தை மந்திரியே ஆளவேண்டும் என்று ஆக்ஞாபிக்கிறான்.

இச்சமயம் அரசனின் பந்துவான கேசரி என்பவன் அரசுரிமை தனக்கு வேண்டுமென்று வாதாடி, அரசனைக் கொல்ல முயல, காவலாளிகளால் சிறைவைக்கப்படுகிறான்.

பறவையால் தூக்கிச் செல்லப்பட்ட ராணிக்கு ஹம்ஸகுமாரன் என்ற ஆண் குழந்தை பிறந்து, இருவரும் ஒரு வனதேவதையால் காப்பாற்றப் படுகின்றனர்.

கேசரி சிறையிலிருந்து தப்பியோடி, சக்ரபுரியை அடைகிறான். அங்கே பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த, சக்ரபுரி மன்னனின் புத்திரி சங்கமாலாவை, கேசரி தூக்கிக் கொண்டு காட்டிற்கு ஓடி, ஓர் தனியிடத்தில் அவளை பலவந்தப் படுத்துகிறான்.

சங்கமாலா பலமாகக் கூச்சலிடுகிறாள். தற்செயலாய் அங்கு வந்த ஹம்ஸகுமாரன் கேசரியை அடித்துரட்டி, சங்கமாலாவைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான்.

அதுமுதல் ஹம்ஸகுமாரனும், சங்கமாலாவும் காதலர்களாய்க் குதூகல வாழ்க்கையில் இருக்கின்றனர்.

கேசரி மீண்டும் சக்ரபுரிக்குச் சென்று தன் திறமையால் உத்தியோகம் பெற்று வசிக்கிறான். சக்ரபுரி மன்னன், காணமல் போன தன் புத்திரியை வீரர்களைக் கொண்டு கண்டு பிடித்து தன்னிடம் அழைத்துச் சென்றுவிடுகிறான்.

சில நாட்கள் சென்ற பின், ஹம்ஸ குமாரன் சக்ரபுரிக்குச் சென்று, ரகசியமாக சங்கமாலாவுடன் இருந்து வருகிறான்.

இதையறிந்த கேசரி, ஹம்ஸகுமாரனை அரசனிடம் பிடித்துக் கொடுத்து மரண தண்டனை வாங்கித் தருகிறான்.

ஹம்ஸகுமாரன் வெட்டப் படுகையில் வனதேவதை வந்து அவனைக் காப்பாற்றி காட்டிற்கு அழைத்துச் செல்கிறது.

அதன் பின் தன் தாயாரின் யோசனைப்படி ஹம்ஸகுமாரன் இரத்னபுரிக்குச் சென்று அரசுரிமை பெறுகிறான்.

ஹம்ஸகுமாரன் சிம்மாசனம் ஏறிய பின், சக்ரபுரி மன்னனுக்கும் அவனுக்கும் போர் நடக்கிறது. அதில் கேசரி பழி வாங்கப் படுகிறான்.

இறுதியில் ஹம்ஸகுமாரன் சங்கமாலாவை மணந்து இரத்னபுரிக்கும், சக்ரபுரிக்கும் ஏகசக்ராதிபதி யாகிறான்.

 உரிமை கதாசிரியருடையது

உடைந்த படகு

"நாதன்"

காதல் சிந்தனை

ராஜகோபாலன் தன் அறையில், ஓர் சோபாவில் சாய்ந்திருந்தான். ஆனால் அவன் மனமோ, கட்டறுத்த காளை போல் கனவுலகில் ஓடி யலைந்து கொண்டிருந்தது.

அன்று மாலை கடற் கரையில் 'காணமற் போன பொருள் கண்டெடுத்தவன்' போல லலிதாவைக் கண்டதிலிருந்து, ராஜுவின் மன நிலை மிகவும் மோசமாக இருந்தது.

சிறிது நாள் எங்கேயோ ஒளிந்திருந்த அவனுடைய காதல் தீ இப்பொழுது கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. அவளின்றித் தான் இந்த உலகில் தனித்து வாழுவது எவ்விதத்திலும் முடியாத காரியம், என்று அவனுக்கு அவன் சிந்தை வற்புறுத்திக் கூறியது.

"சே! நான் ரொம்ப முட்டாள் தனம் செய்துவிட்டேன். அவளைக் கண்டவுடன் காட்டு மிராண்டி போல் நடந்து கொண்டது சர்வ தப்பு! உண்மையில் என்னால்தான் காரியம் கெட்டது.

"அட பாவி மனமே! அவளைக் கண்டவுடன் உனக்கு அவ்வளவு அவசரமா? முதலில் ஒரு க்ஷேம சமாசாரத்தைக்கூட விசாரியாமல், உன் காதலைப் பாட ஆரம்பித்துவிட்டாயே! அவள் சொன்னது போல், கடற் கரையை என்ன நாடக மேடையென்று நினைத்துக் கொண்டாய்?

"ம்—பேசி யென்ன பயன்? கைக் கெட்டியது வாய்க் கெட்டாயல் போய் விட்டது. இனி 'சீச்சி! இந்தப் பழம் புளிக்கும்' என்று அவளை மறந்துவிட வேண்டியது தான். ஓ! அது மட்டும் முடியாது. அவளில்லாவிட்டால், அப்புறம் நான் உலகில் எதற்காக இருக்கவேண்டும்?

"லலிதா! எல்லோருடைய நோயையும் நான் தீர்த்து விடுகிறேன். ஆனால் என் வியாதியைப் போக்கிக் கொள்ளத் தான் என்னால் முடியவில்லை. ஆம், என்னால் முடியாது தான். எனக்கு வைத்தியம் செய்ய வேண்டியவள் நிச்சயம் நீதான்.

"உனக்கு என்மேல் பிரியம் இருப்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால் உன்னை நான் சந்திக்கையில் மட்டும் நீயேன் வெறுப்புள்ளவள் போல் காட்டிக் கொள்கிறாய்? அதைக் கூட நான் அறிவேன் லலிதா! என் காதலைப் பரிட்சை செய்யத் தானே, நீ அப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்?

"லலிதா, நீ என்னை எப்படி வேண்டுமானாலும் பரிட்சை செய்து கொள்ளலாம். ஆனால் முடிவில் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல் மட்டும் விட்டு விடாதே!

"உன் நினைவால் என் தொழில் கூடக் கெட்டுவிட்டது. இருந்தாலும்

பாதகமில்லை லலிதா! உன் ப்ரேமைக்காக நான் எதை இழக்கவும் தயார்.

"கந்தருவ ஸ்திரீ போல் காட்சியளித்துவிட்டு அப்படிக் கம்பி நீட்டிவிட்டாயே! ஆனால் நானா விடுபவன்! இதோ என் இருதயத்தில் உன்னை வைத்துப் பூட்டித்தான் வைத்திருக்கிறேன். எனவே என்னை விட்டு நீ போக முடியாது. முடியாது லலிதா முடியாது; உன்னையும் நான் விட்டுப் போக முடியாது......"

இம்மாதிரி ராஜகோபாலன் உளறிக்கொண்டான். அச்சமயம் உள்ளே வந்த அவன் தாயார் "அட பைத்தியமே! சாப்பிடக்கூட வராமல் ஏன் இப்படி உளறுகிறாய்? சரி சரி; சீக்கிரத்தில் உன் கழுத்தில் ஒருத்தியைக் கட்டிவைத்தால் தான் உன் பைத்தியம் தலையும்—எழுந்து வா, சாப்பிடலாம்" என்று சொன்னாள். ராஜு ஏதோ பதுமைபோல் அம்மாவின் பின்னே சென்றான்.

கவனிப்பதில்லையா?

ராஜகோபாலனின் பழைய நண்பனான நாராயணன் வெகு அவசரமாக எங்கேயோ போவதற்காகத் தன் வீட்டை விட்டுக் கிளம்பினான்.

அப்பொழுது சமையல் உள்ளிலிருந்து கொண்டே அவனுடைய தாயார் லோகம்மாள் "எண்டா நாணு! காப்பி போடச் சொல்லிவிட்டு எங்கேயடா கிளம்பி விட்டாய்?" என்று கேட்டாள்.

"என்னம்மா, பெரிய தொந்தரவு பண்றே! எங்கேயாவது புறப்படும் போதுதான் சகுனப் பீடைமாதிரி தடை செய்யறது..." என்று சிறிது கோபத்துடன் நாணு கூறினான்.

"அதென்னடாப்பா, காப்பி சாப்பிடாமல்கூட, பெரிய காரியம்? உன் வயத்துக்குச் சாப்பிடச் சொன்னாலே இப்படிக் கோவிச்சுக்கறயே! ம்—இந்த 'மாடர்ன் கபே'க்களும், 'காரச்சி கபே'க்களும் உனக்குக் காப்பி கொடுக்க இருக்கும்போது வீட்டுக் காப்பியை நீ யேன் சாப்பிடப் போறே?..."

"அம்மா! சும்மா ஏன் அளந்து கொட்டறே! ஏதாவது காரியம் இருந்தால் சொல்லு, நான் சீக்கிரமாகப் போகணும்!"

"இப்படிப் போகணும், போகணும்னு சொல்றயே! அந்த இடந்தான் எது? சொல்லப்படாதா?"

"இதேதடா பெரிய சங்கடமாயிருக்கு! எங்கே போறேன்னு கேக்கறே? 'வெஸ்ட் எண்ட்' டாக்கீஸில் இன்றைக்கு 'கான் வித் தி விண்ட்' என்ற அருமையான படம். அதைப் பார்க்கத்தான் கிளம்பினேன். போதுமா?......"

"போதுமடா, போதும்! இப்படி குடும்பத்தைக் கவனியாமல் சினிமாவும், ஷோவும்னு தறுதலையாச் சுத்திண்டிருந்தா, குடித்தனம் உருப்பட்டாப்லேதான்"

"ஏனம்மா! சினிமா பாக்கறதாலே குடித்தனம் என்னமாக் கெட்டுப் போயிடும்? அதைத்தான் சொல்லேன்!"

"நான் அதுக்குச் சொல்ல வரலேடா, குடித்தனத்தை கவனிச்சுட்டு உன் இஷ்டம் போல் சுத்தப்படாதான்னுதான் சொல்றேன்"

"அப்படித்தான், நான் என்னத்தை கவனியாமல் போய் விட்டேன்? எங்கே ஒரு விரலை மடக்கு பார்ப்போம்!..."

"விரலே என்னத்துக்கு மடக்கறது? உன் தங்கை பெரியவளாகி வருஷக் கணக்காய் வீட்டோடெ இருக்காளே! அவளுக்கொரு நல்ல மாப்பிள்ளே தேடச் சொல்லி எப்பொ இருந்து அடிச்சிக்கறேன்! உங்கப்பா இருந்தா, இவ்வளவு நாள் விட்டு வைப்பாரா?"

"அப்பாடா! இதுக்காகத்தான் இவ்வளவு பீடிகையா? ஏனம்மா, நான் அங்குமிங்கும் சுத்தறதைக் கொண்டே, எனக்குத் தங்கை விஷயத்தில் அக்கரையில்லேன்னு நினேச்சுக்கறதா? உனக்கிருக்கிற அக்கரையைக் காட்டிலும் எனக்கு நூறு மடங்கு இருக்கு, தெரியுமா?

"ஒரு இடத்திலே நல்ல மாப்பிள்ளே யாகப் பார்த்து வைத்திருக்கேன். இப்பொழுதுகூட நான் அங்கே தான் புறப்பட்டேனுக்கும்!..."

"உனக்கு அவ்வளவு சிரத்தை யிருந்தா, ரொம்ப சந்தோஷம் நாணு! எப்படியோ அவள் காரியத்தை முதலில் கவனி!" "சரி!" என்று தலே யாட்டி விட்டு வெளிக் கிளம்பினுன் நாணு.

புதிய வலே

டாக்டர் ராஜகோபாலன் எங்கேயோ வெளியே சென்றிருந்தான். அவன் தாயார் அடுப்பருகில் ஏதோ காரியம் செய்து கொண்டிருந்தாள். சுகுண முன் கட்டில் உட்கார்ந்து பின்னல் வேலேயில் ஈடுபட்டிருந்தாள்.

அப்பொழுது ஸ்ரீமான் நாணு சீட்டியடித்தவாறே உள்ளே நுழைந்தவன் முன் கூடத்தில் இருந்த சுகுணவைப் பார்த்து சிறிது பின் வாங்கினுன்.

சுகுண நாணத்துடன் எழுந்து, தலே குனிந்தவாறே "அண்ணு, எங்கேயோ போயிருக்கார். வர எழுமணியாகும்........." என மெதுவாய்க் கூறினுள்.

"ஒரு முக்கியமான விஷயம் பேசணும்னு வந்தேன். அவன் எங்கேயோ போயிட்டானே! சரி. நாளேக்குத்தான் வரணும்!" என எங்கேயோ பார்த்தபடி நாணு சொன்னுன். திரும்பிப் போகலாமா, வேண்டாமா என அவன் கால்கள் தயக்கத்துடன் நின்றன. அவன் குறிப்பைக் கடைக் கண்ணுல் பார்த்த சுகுண "அண்ணு இல்லாட்டா என்ன! உள்ளே அம்மா இருக்காள். அவர் வர வரையிலும் அம்மாவோடெ பேசிண்டிருங்களேன்!" என்று கூறினுள்.

சுகுணவின் வார்த்தைகள் அவனுக்கு என்னவெல்லாமோ அர்த்தத்தைக் கொடுத்தன. அசடு வழியும் சிரிப்புடன் அவளேப் பார்த்தான் நாணு. அதே சமயம் சுகுணவும் அவனே நோக்கினுள். ஒரு விநாடி அவர்களுடைய பார்வை ஏதோ பேசிக் கொண்டது போல் தோன்றியது. மறு விநாடி ஏதுவோ நினேவுக்கு வந்தவன் போல் சமையல் கட்டை நோக்கிச் சென்ருன்.

"மாமி! சௌக்யமா?" என்ற குரலேக் கேட்டு, சமையல் காரியத்தில் ஈடுபட்டிருந்த சீதா திரும்பிப் பார்த்தாள்.

"யாரது? நாணுவா? வாடாப்பா, வா! எல்லாம் சௌக்யந்தான். இப்படி உட்கார்!" என்று ஒரு பலகையைக் காட்டினுள் சீதா.

கீழே போட்டிருந்த பலகையின் மீது உட்கார்ந்தவாறே "என் மாமி! ராஜு எங்கே போயிட்டான்?" என்று நாணு கேட்டான்.

"அதை யேண்டா கேக்கறே? அவன் போற இடத்தைச் சொல்ருனு, வர்ர இடத்தைச்சொல்ருனு! கொஞ்ச நாளா அவன் தன் தொழிலேயும் விட்டு விட்டு ஏதோ பைத்தியம் பிடித்தவன் மாதிரி திரிகிருன்......"

"ஆமாம் மாமி, வயது வந்த பிள்ளேக்கு நீங்கள் காலா காலத்திலே ஒரு கலியாணத்தைச் செய்து வைத்தால் தானே, அவன் ஒழுங்கா யிருப்பான்!"

"கலியாணமா? அந்தப் பேச்சை எடுத்தாலே ஏனே அவன் 'சள்புள்' என்று நாய் மாதிரி விழருனே! அவன் மாமா இதுவரை ஆயிரம் பெண்ணேப் பார்த்திருப்பார்; ஒண்ணுமே வேண்டாங்கருன்......"

"ஆமாம், அதற்குக் காரணம் என்ன வென்று உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாமலென்ன, எவளோ லலிதாவாம்! சதா அவள் பெயரைச் சொல்லி அலேகிருன்......"

"சரிதான் துரை காதலில் இறங்கி விட்டானுச்கும்! வரட்டும் புத்தி சொல்கிறேன்......"

அப்பொழுதுதான் உள்ளே வந்த ராஜு "என்னடா புத்தி சொல்றே?" என்று கேட்டபின் அவர்கள் பேச்சு இடையில் தடைபட்டது.

முயற்சி செய்கிறேன்

ராஜுவும், நாணுவும் ஒரு தனி அறையில் உட்கார்ந்திருந்தனர். ராஜு மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

"டேய் நாணு, அம்மாகிட்ட என்னடா அளந்துண்டிருந்தே? என்னமோ புத்தி கித்தி சொல்றதாக பிரகஸ்பதி மாதிரி சொன்னயே! என்னடா விஷயம்?"

நாணு ஒரு கனேப்புக் கனேத்துக் கொண்டான். "ஒண்ணுமில்லேடா, நீ என்னமோ டாக்டர் தொழிலே வர வர கவனிக்க மாட்டேங்கறயாம்; இப்படியிருந்தா, கையிலே இருக்கிற பணம் எத்தனே நாளேக்கு வரும்னு அம்மா சொன்னு. அதுதான், நீ வந்ததும் உனக்குப் புத்தி சொல்றேன்னு, சொல்லிண்டிருந்தேன். வேறே ஒண்ணுமில்லே......"

ராஜு பெருமூச்சுடன், ஏதோ யோசித்தபடி மேலே பார்த்தான். பின்பு, "போடா நாணு! என்ன டாக்டர் வேலே போ! வாவர எனக்கு அதிலே சிரத்தையே குறைஞ்சு போச்சு!" என்ருன்.

"அதென்னடா, அப்படி? இந்த வயசிலே உனக்கு ஏன் அப்படி விரக்தி ஏற்பட்டுவிட்டது? ஏதாவது காதல் வலேயில் எவளாவது உன்னேப் போட்டு விட்டாளா, என்ன?"

ராஜு கன்னத்தில் கை கொடுத்த வாறு தலே குனிந்து பேசாதிருந்தான். "ஏண்டா ராஜு! ஏன் மௌனம்? என்னிடத்திலே உன் ரகஸ்யத்தைச் சொல்லப்படாதா?......"

"சொல்லாமலென்ன நாணு! நீ நினைக்கிறபடி ஒருத்தி என்னேக் காதல் கயிற்ருல் கட்டித்தான் என்னே இப்படி வாட்டுகிருள்!"

"அப்படிச் சொல்லுடா ராஜா! சரிதான் கன்னியின் கண்ணியில் மாட்டிக் கொண்டாயா? பின், உன் தொழிலே நீ கவனிக்காமலிருப்பதில் ஆச்சரியமென்ன! என் பிரதர்! உன்னே மயக்கிய அந்த பாக்யவதி யார், சொல்ல முடியுமா......"

"நாணு! வீணே நீ என்னேத் தமாஷ் செய்யாதே! உண்மையில்

அவளில்லாவிட்டால் நான் ஒரு விநாடிகூட இனி சௌக்கியமாய் இருக்க முடியாது.''

“சரிதாண்டா, அவள் பெயரைத் தான் சொல்லேன்......''

“சொல்கிறேன், அவளை உன்னால் கொண்டுவர முடியுமானால்......''

“பலே பலே! எனக்கு நல்ல உத்தியோகம் கொடுத்தாய்! சரி, ‘ட்ரை’ பண்றேன்; இப்போதாவது பெயரைச் சொல்லு!''

“லலிதா......''

“சரிதான் பெயர்மட்டும் போதுமா? அவள் எங்கே யிருப்பது, என்ன செய்து கொண்டிருக்கிறாள், என் பதையெல்லாம் சொன்னால் தானே ஆகும்!''

“நாணு! நான் எங்கள் ஊரில் இருக்கையில், அவள் என் ஆஸ்பத்திரிக்கு ஒரு நாள் வந்தாள். அப்பொழுதுதான் அவள் என் நெஞ்சைத் திருடியது. இப்பொழுது அவள் அந்த ஊரில் இல்லை; ஆனால் மதராஸில் இப்பொழுது எங்கேயோ இருப்பதை மட்டும் நான் அறிவேன்; ஆயினும்......''

“நாணு தரையை விரலால் கீறியவாறே, ஏதோ யோசனையில் மூழ்கினான். பின்பு, “ராஜூ! என்னமோ என்னால் கூடுமான வரை முயல்கிறேன்......'' என்றான்.

“நாணு! இப்பொழுதுதான் என்னுள் சாந்தி பிறந்தது. கவலைகூடப் பாதி மறைந்துவிட்டது'' என்று குதூகலமாகக் கூறினான் ராஜூ. அதன்பின் இருவரும் சிற்றுண்டி அருந்தியவாறு வெகு நேரம் அரட்டை அடித்தனர்.

வரன் கிடைத்ததா?

வெகு குதூகலத்துடன் ஏதோ பாடலை முணுமுணுத்தவாறே, நாணு தன் வீட்டுக்குள் நுழைந்தான். அவனுடைய தாய் கூடத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் சாய்ந்து படுத்திருந்தாள். நாணுவின் தங்கை ராஜலக்ஷ்மி கூடத்தின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து ஏதோ ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

நாணு சென்று தொப்பெனச் சோபாவில் சாய்ந்தான். தன்னையு மறியாமல் “சரிதான் என் வேலையே வேலை! மாப்பிள்ளை தேடப்போய்ப் பெண்ணையல்லவா தேடிப் பிடித்தேன்!'' என்று சொல்லிக் கொண்டான்.

“என்னடா நாணு! என்னமோ பேத்தறயே! என்ன சமாச்சாரம்?'' என்று லோகம்மாள் கேட்டாள்.

“பேத்தல் ஒண்ணுமில்லேம்மா! நம்ம லக்ஷ்மிக்குத் தகுந்த வரனைப் பார்த்து வந்துவிட்டேன்.''

லோகம்மாள் சந்தோஷத்துடன் ஊஞ்சலில் எழுந்து உட்கார்ந்தாள். ராஜலக்ஷ்மியோ, நாணத்துடன் “போ அண்ணா! உனக்கு எப்பொ பார்த்தாலும் இந்தப் பேச்சுதான்...'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து தன் அறைக்குள் சென்றுவிட்டாள்.

லோகம்மாள் ஆவலுடன் “எண்டாப்பா, எங்கே வரன் பார்த்திருக்கிறாய்? நல்ல இடமா? பிள்ளையாண்டான் எதுவரை வாசித்திருக்கிறான்? ஆஸ்தி ஏதாவது உண்டா? அப்பா, அம்மா இருக்கிறார்களா? உடன் பிறந்தார்கள் உண்டா? பையனுக்கு வயசு என்ன இருக்கும்?'' என்று மூச்சுவிடாமல் கேட்டாள்.

நாணு கலகலவென்று சிரித்தான், "ஏனம்மா! இன்னும் கேள்வி பாக்கி யிருக்கா? அல்லது இரண்டாவது ஆவர்த்தமாக வைத்துக் கொண் டாயா?......அப்பாடா! மகளுக்குக் கல்யாணம் என்றால் என்ன குதூ கலம் பார்!"

"பின்னெ குதூகலமும், கொண் டாட்டமும் இருக்காதா, என்ன? அது சரி, நான் கேட்டதற்கு பதில் சொல்லுடாப்பா!"

"அம்மா! மாப்பிள்ளை ரொம்ப சமர்த்து. வயது 26 தான் ஆகிறது. என்னைப்போல அவனும் ஒரு டாக்டர் தான். முன்பு என்னோடுகூடப் படிக்கையில் நம்ம ஆத்துக்குக்கூட இரண்டொரு முறை வந்திருக்கானே! ஞாபகமில்லையா? அவனுக்குப் பூர்வீக சொத்தும் ஏதோ இருக்கிறது. அப்பா இல்லை; அம்மாவும் ஒரு தங்கையும் இருக்கிறார்கள். பார்க்கப் போனால் நம்ம குடும்பம் மாதிரிதான், எல்லா அம்சங்களிலும். ஆனால் இப்பொழுது ஒரு பெண்ணை நினைத் துக் கொண்டு, அவளைத்தான் கலியாணம் செய்து கொள்வேன், என்று ஒற்றைக் காலில் நிற்கிறான். அது ஒன்றுதான் சங்கடமாயிருக் கிறது..." என்றான் நாணு.

"சரிதாண்டாப்பா! நல்ல வரன் பார்த்தாய்! 'முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டினேன், இரண்டு பாழ், ஒன்றில் தண்ணியே யில்லை' என்ற மாதிரி யல்லவா முடித்துவிட்டாய்!"

"பொறு அம்மா! அவசரப்படாதே! அவனைச் சரி செய்வதற்கு நானச்சு, அந்த வரன் தான், நான் பார்த்தவர் களில் எனக்குப் பிடித்திருக்கிறது..."

"உனக்குப் பிடித்திருந்தால் போதுமா? லக்ஷ்மியின் மனதுக் கல்லவா, முதலில் பிடித்திருக்கணும்! என்னமோ நல்ல இடத்தைப்பார்!" என்று சொல்லிவிட்டு உள்ளே எழுந்து சென்றாள் லோகம்மாள்.

வரத் தயார்!

டாக்டர் ராஜு சில நாட்க ளாகவே தன் மருந்துச் சாமான் களுக்கும், வைத்தியக் கருவிகளுக்கும் நீண்ட ஓய்வைக் கொடுத்திருந்தான். எனவே இப்பொழுது அவனுக்கு ஒரு வேலையும் கிடையாது. ஹாயா கச் சாப்பிட வேண்டியது. சினிமா வுக்கோ, டிராமாவுக்கோ போகவேண் டியது. இவைதான் ராஜுவின் தற்போதைய தினசரி வேலை.

ஒரு நாள் காலை, அவன் தன் அறையில் உட்கார்ந்து தினசரிப் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய மாமா உள்ளே பிரவேசித்தார். ராஜு எழுந்து மரியாதை செய்து நாற்காலியில் உட்காரச் செய்தான்.

"என்னடா, ராஜு! இந்தக் காலத் திலே இப்படித் தொழிலை விட்டு விட்டு சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படியப்பா பிழைக்கிறது? நீயோ, என் பேச்சையும் கேட்கமாட்டே னென்கிறாய்! உங்கம்மாவின் சொல்லை யும் உதறித் தள்ளுகிறாய்!—சரிதான், உனக்குத் தகுந்த இடமாக ஒன்று பார்த்திருக்கிறேன். உனக்கு சம்மத மானால், சொல்லு, இன்றைக்கே முடித்து விடுகிறேன்......" என்று அவர் கூறினார்.

ராஜு மிகுந்த வெறுப்புடன், "மாமா! . மீண்டும் மீண்டும், என் னிடம் இந்தக் கலியாணப் பேச்சை யெடுக்க வேண்டாம், நீங்கள் எந்த இடம் பார்த்தாலும் எனக்கு அது பிடிக்காது. வீணே எதற்கு முயற்சி?

நான் நினைத்த பெண்ணைத்தான் நான் எப்படியும் கலியாணம் செய்து கொள்வேன்'' என்று பிடிவாதமாகச் சொன்னான்.

அவனுடைய மாமா ஏனோ 'கலகல' வென்று ஐந்து நிமிஷம் சிரித்தார். ராஜூ ஒன்றும் தோன்றாது திகைத்து உட்கார்ந்திருந்தான்.

''அட அப்பாவி மனுஷா? நான் ஒன்று சொன்னால், நீயொன்று உளறுகிறாயே!'' என மீண்டும் அவர் சிரித்தார்.

''என்ன மாமா! நீங்கள் எதைச் சொன்னீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' என்றான் ராஜூ.

''உனக்கேனப்பா, புரியப் போகிறது! உன் மனதைத் தான் எவளோ கொள்ளை யடித்துப் போய்விட்டாளே ! அதிருக்கட்டும் ! நான் பார்த்ததாகச் சொன்னது பெண் இல்லையடா ராஜூ ! உனக்குத்தான் இந்த டாக்டர் தொழிலே பிடிக்க வில்லையே என்று, உனக்குத் தகுந்த நல்ல உத்தியோகமாய் ஓரிடத்தில் பார்த்து வைத்திருக்கிறேன்...''

ராஜூவின் முகத்தில் அசடு வழிந்தது. ''ஓஹோ! அப்படியா? அதென்ன உத்தியோகம்? எங்கே மாமா பார்த்திருக்கிறீர்கள்?'' என்று ராஜூ கேட்டான்.

''எனக்குத் தெரிந்த ஒரு பிரபல ஸ்டுடியோவிலே ஒரு மானேஜர் பதவி காலியா யிருக்கிறது, அதைத்தான் முடிவு செய்திருக்கிறேன்; உனக்குப் பிடித்திருந்தால் புறப்படு! நாளைக்கே ஒழுங்கு செய்து விடுகிறேன்.''

''ரொம்ப சந்தோஷம் மாமா! நாளைக்கே நான் வரத் தயார்!'' என்றான் ராஜூ.

''சரி தான், இந்த விஷயத்திலாவது என் பேச்சைக் கேட்டாயே!'' என்று சிரித்த வண்ணம் சொல்லி விட்டு ''சீதா!'' என்று கூப்பிட்டவாறே பின் கட்டுக்குச் சென்றார் அவர்.

(தொடரும்)

ஜகத்ரக்ஷக

ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. 2.

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)

வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

துக்கடாக் கதை

(எத்து)

க. ந. சு. சுலைமான் ராவுத்தர் ரங்கூனில் ஓர் பெருத்த தேக்கு மர வியாபாரி. அவருக்கு இந்தியாவில் நான்கு பிரான்சுகள் இருந்தாலும், வேலூர் பிரான்ச் மேல்தான் அதிக பிரியம். காரணம், கரீம்சாயபும் மூர்த்தி ராவும், பொறுப்பு வாய்ந்த மானேஜர் களாய் அமைந்ததால் தான். இவ்விரு வரில் கரீம்சாயபு தரப்பில் வெளியூர் ஆர்டர்களும் பணங்களும் இருந்து வந்தன. உள்ளூர் ஆர்டர்களும், கடை விற்பனையும் மூர்த்திராவ் வசமிருந்தது. ஜாதி, வித்தியாசமாய் யிருந்தாலும், இவ்விருவரும் ஆப்த நண்பர்கள். கரீம் சாயபுக்கு கஷ்டம் கொடுக்காமல் கணக்கு வேலைகளை மூர்த்திராவே பார்த்து வந்தார்.

ஒருநாள் தன் குடும்ப அவசர நிமித் தமாய் மூர்த்திராவுக்கு ரூ 200 வேண்டியதா யிருந்தது. வெகு நாழிகை யோசனை செய்து பார்த்தார். ஒன்றும் தோன்றவில்லை. திடீரென ஒரு முடிவுக்கு வந்தார். உடனே கரீம்சாயபு பேரில் ரூ 200 பத்து எழுதி விட்டு கடைமூடும்போது பணம் கொண்டு போகலாமென யெண்ணியிருந்தார்.

அன்று திருச்சியிலிருந்து வந்த 200 ரூ செக்கை மாற்றி செலவழி த்து விட்டதினால், மூர்த்திராவுக்குத் தெரியாமல், திருச்சி மெய்யப்பசெட் டியார் வரவு 200 ரூ யென்று கணக் கில் பதிந்து விட்டார் கரீம்சாயபு.

இரவு 8 மணி, கடைமூடும் சமயம். பணங்களை எண்ணி கணக்கு சரி பார்க்காமல் பேச்சைக் கொடுத்துக் கொண்டே அருகிலிருந்தார் கரீம்சா யபு. பணம் எடுக்கமுடியாமல் சஞ் சலப்பட்டுக் கொண்டிருந்தார் மூர்த்தி ராவ். இப்படியாக இருவரும் முழித் துக் கொண்டே கணக்குகளை சரிக் கட்டாமல் கடையை மூடிவிட்டனர்.

மறு நாள் காலை கடைதிறந்த வுடன், முதலாளி சுலைமான் ராவுத்தர் அசம்பாவிதமாக அவ்விருவரையும் சமீபத்தில் வைத்துக் கொண்டு கணக் குகளை பரிசீலனை செய்ய ஆரம்பித் தார்.

தான் பணம் வாங்காமலிருக்கும் போது தன்பேரில் ரூ 200 பத்து எழுதி விட்டதை எங்கு கண்டு பிடித்து விடுகிறானோ கரீம்சாயபு, என்று மூர்த்திராவுக்கு ஒருபுறம் பயம்.

கரீம் சாயபுக்கோ, நாம் எடுத்துக் கொண்ட 200 ரூபாய் இவனுக்கு எப்படித் தெரிந்துவிட்டது? நம் பேரில் பத்து எழுதி யிருக்கிறானே, என்று இவ்விருவரும் முழித்துக் கொண்டிருக்க, முதலாளி கணக்கு சரியென்று சந்தோஷித்துப் போய் விட்டார்.

ஆனால் மூர்த்திராவும் கரீம்சாயபும் ஒருவரை யொருவர் பார்த்து முழித் துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

நாலணு போச்சு!

"ஜில்ஸா"

"ஏன்டா இப்படி வீணுக ஈக்களை வதைக்கின்றீர்கள்?........."

தெருவில் போகும் பொழுது, ஈக்களை அடித்து அற்புதமாக விளையாடிக்கொண்டிருந்த அபூர்வமான குழந்தைகளைக் கண்டு என் நண்பன் ஹமீர்கல்யாணி இப்படி ஒரு போடு போட்டான்.

"நீங்க போங்க ஸார்......'ஈயைக் கண்ட இடத்தில் கொல்!' இன்னு எங்க வாத்தியார் இன்னக்கித்தான் சொல்லிக் கொடுத்தாரு. அதனுலேஹ்......... " என்று அந்த வாண்டுகள் என்னருமை நண்பனின் முகத்திலறைந்தது போல நீட்டி வைத்தார்கள். அவர்கள் மறுபடியும் தங்கள் ஈயடிக்கும் விளையாட்டில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார்கள்.

நான் மெதுவாக நகைத்துக் கொண்டேன்.

சிறுவர்களால் மூக்கறுக்கப்பட்டதின் காரணமாக என் நண்பனின் முகம் சிவப்பாக இருந்தது. வெட்கத்தின் ரேகைகள்!

"ஹூம்! பள்ளிக்கூடங்களாம், பள்ளிக்கூடங்கள்! அபத்தக் களஞ்சியத்தின் ஸ்டாக் ஏற்றுமதியாகும் குப்பை கூளங்கள்! சொல்லித்தருவதெல்லாம் சுத்த ரூட்! உதாரணமாக ஹிஸ்டரியில் 'பிளாக் ஹோல் ஆப் கல்கட்டா'வை எடுத்துக்கொள்....."

அவன் வம்புக்கு இழுக்க ஆரம்பிப்பான் என்று எனக்கு நன்ருகத் தெரியும். நானே முந்திக்கொண்டேன்.

"அதற்கும் இந்த ஈ சம்பவத்துக்கும் என்ன சம்பந்தம்?......வளக்கமல்தான் ஆரம்பியேன்......" என்று நான் மெதுவாகச் சொன்னேன்.

"நீ கேவலமாக, 'ஈ சம்பந்தம்' என்று சொல்லிவிட்டாய். அப்ப! அந்த ஒரு ஈயால்தான் நான் ஒரு பெரிய துப்பறிபவன் ஆனேன் என்று நான் சொன்னுல் நீ ஆச்சரியப்படாமலிருக்க முடியாது........." என்று அவன் என் முகத்தைக் கூர்ந்து நோக்கினுன்.

வாசக நேயர்கள் என் நண்பன் ஹமீர்கல்யாணி ஒரு துப்பறியும் துளசிதாஸ் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்!

"......................."

நான் வெறும் பார்வையுடன் என்னைத் திருப்தி செய்துகொண்டேன்; அவனையும் திருப்தி செய்துவிட்டேன். அவன் தானுகவே ஆரம்பித்தான்:

"மூன்று வருடங்களுக்கு முன் நம் ஊரில் காம்போதித் திருட்டுக்கூட்டம் ஒன்று வந்ததே, ஞாபகமிருக்கின்றதா?........."

"அதையெல்லாம் என்னிடம் கேட்காதே, கதையைச் சொல்லி முடி........."

"அது ஒரு பெரிய திருடர் கூட்டம். அதன் தலைவன் "தேவமனுேஹரி" என்ற புனைபெயரால்தான் அழைக்கப்படுவான். நான் எப்படியாவது அந்தக் கூட்டத்தைப் பிடித்து,

பெரும்புகழ் அடையவேண்டு மென்று மிகவும் முயற்சி செய்தேன். ஒரு சமயம் அவர்கள் தங்கி இருந்த இடத்திற்கு கூடப் போய்விட்டேன். முன் ஏதோ ஒரு பவனோ, கபேயோ, லஞ்ச் ஹோமோ, அல்லது சாதாரண ஹோட்டலோ அங்கிருந்தது. அது ஞாபகமாக ஒரு ஐஸ் வாட்டர் சாப்பிட அங்கே போனேன். குருட்டு அதிர்ஷ்டம் குறுக்கே வந்து கூத்தாடும் என்று சொல்லுவார்களே, அது போல, அது என் குறுக்கேயும் வந்து பார்த்தது.

''நான் உள்ளே சென்றேன். பின் வரும் சம்பாஷணை என் காதில் விழுந்தது:

''தேவ மனோஹரி! இன்று எங்கே நம் வேலை?........''

''வறன்டி அண்ட் கரண்டி பாங்க்'' தான்.........''

''நான் துள்ளிக்குதித்தேன். என் சாமர்த்தியத்தால் அந்த டிம்கி கள்வர்களின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டேனல்லவா?

''சந்தோஷத்தால் துள்ளிக்குதித்தேன். அங்கே என் துர்அதிர்ஷ்டம் ஒரு நாய் ரூபத்தில் உட்கார்ந்திருக்க வேண்டுமா? கள்வர்களின் சூரநாய் மோப்பம் பிடித்தவாறு தூங்கிக் கொண்டிருந்தது. நான் தவறி அதன்மேல் கால் வைத்துவிடவும் அது 'லொள்'ளென்று குரைத்து, மறுபடியும் தூங்க ஆரம்பித்தது.

''ஆனால் அந்தத் திருடர்கள் ஓடி வந்தார்கள்.........பிறகு சொல்லவா வேண்டும்? நரகத்தில் விழுந்த உயிர் தான். படாதபாடு படுத்தி என்னை ஒரு கட்டிலின்மேல் படுக்கவைத்து கட்டிப்போட்டார்கள். தேவமனோஹரி ஒரு பாட்டிலைக் கொண்டுவந்தான். அதில் 'ஸல்-f யூரிக் ஆஸிட்' என்று எழுதி யிருந்தது. அதைப் பார்த்ததுமே.......அடேயப்ப!....... இந்தா பார், இப்பொழுது நினைத்தால் கூட என் உடம்பெல்லாம் நடுங்குகின்றது...........அந்த பாட்டிலை என் நெற்றியின் மீது வைத்து மூடியை எடுத்துக்கொண்டான். நான் கொஞ்சம் அசைந்தாலும் போதும், பாட்டில் கவிழ என் முகமெல்லாம் ஆஸிட்டில் கருகிப்போய்விடும்......'' டேய்! ஜங்காரத்வனி! நம்ப ''வறண்டி அண்ட் கரண்டி'' பாங்கிலேருந்து அடுச்சிவந்ததக்கப்பறம் இவனே நம்ப காளிக்கு பலிகொடுக்கலாண்டா!...'' என்று கடகட வென்றும் சிரித்தான் ....''

நான் குறுக்கிட்டேன்.

''ஹமீர்கல்! முடிக்கிற எண்ணமுண்டா, இல்லையா?''

''நான் இவ்வளவு கஷ்டத்திலிருக்கின்றேன் என்று தெரிந்தும் உன் மனம் இவ்வளவு கல்லாக இருக்கின்றதே அப்பா!......அவர்கள் திருடப் போய்விட்டார்கள். நான் சவம்போல கொஞ்சமும் அசைவின்றி படுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் ஒரு ஈ வந்து அந்த பாட்டிலின் மேல் உட்கார்ந்தது. பிறகு ஆஸிட்டிலும் நக்கிப்பார்த்தது. நான் அடுத்த சகண்ட் அது செத்து கீழே விழுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் அது ரொம்ப ஜாலியாக அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தது. இன்னும் கூட்டம் கூட்டமாகவும் ஈக்கள் வந்து சேர்ந்தன. எனக்குப் பெரிய சந்தேகம் ஏற்பட்டு விட்டது. ஆஸிட்டாக இருந்தால் ஈக்கள் அப்படிவந்து சேருமா? ஈ உண்ணக்கூடிய பண்டமாகத்தான் அது இருக்க வேண்டும்.........நான் தைரியமாக அசைந்து கொடுத்தேன். பாட்டில் உருண்டு விழுந்தது. நான் பயந்தபடி முகமெல்லாம் எரியவில்லை. தேனைப் போலப் பிசுபிசு வென்று எங்கும் ஒட்ட ஆரம்பித்தது............

"பிறகு நான் அசைந்து, ஆட்டி, கயிற்றைத் தளர்த்திக் கொண்டேன். கட்டையும் அவிழ்த்துக்கொண்டு, வெளியில் பூட்டி இருந்தபடியால், ஏணி வைத்து சுவரேறி குதித்து வெளியே வந்தேன். பிறகு......"

"பிறகு நீ போலீஸுக்கு விஷயத்தைச் சொல்லி, அந்தக் கள்வர் கூட்டத்தைக் களவும் கையுமாக பாங்க் உள்ளேயே பிடித்துக் கொடுத்து, இனாம் வாங்கினாய், அவ்வளவுதானே? ...."

நான் முடித்தேன்.

"இனாம் மாத்திரமா? எனக்கு வந்த புகழ் எங்கே போவது?...... இந்தா பார், அப்பொழுது தேன்பட்டு என் தலை மயிரெல்லாங்கூட வெள்ளை ...."

"ஓ......ஐ ஸீ!......"

இதிலிருந்து எனக்கு ஈ என்றால் உயிர். தினம் ஒரு நாலணாவிற்காவது மிட்டாய் வாங்கி கழனிபானையின் அருகில் கண்டிப்பாக வைப்பேன்..."

"ஓ! ஐ ஸீ!!......"

"சரி...இன்றைக்கு ஈக்கு ஏதாவது தின்பண்டம் வாங்கி வைக்கக் காசில்லை. ஒரு நாலணா இருந்தால் கொடு......"

அட பாவி! அவன் சொன்னதை எல்லாம் நம்பிவிட்டதைப் போலப் பாவனை செய்ததற்குக் கைம்மாறு இது?



ரூ. 300 பரிசு

மாய மோதிரம்

இந்த மோதிரத்தை உபயோகித்து வந்தால் நினைத்த காரியம் ஜயமாகும். காதல், சத்துரு, லாட்டரி முதலியவைகளில் வெற்றி யளிக்கும். எல்லாவித நோய்களையும் தீர்க்கும். விலை ரூ. 2-4-0. அபூர்வ சக்தியுள்ள மோதிரம் விலை ரூ. 5-0-0. போஸ்டேஜ் அணா 8 தனி. வெளிநாட்டிலுள்ளோர் முன்பணம் அனுப்பவேண்டும். இதில் உண்மையில்லை என்றும், பிரயோஜனமில்லை என்றும் நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 பரிசு அளிக்கப்படும்.

உங்கள் அதிர்ஷ்டம்

ஒரு போஸ்டு கார்டில், கடிதம் எழுதும் சரியான நேரமும், உங்கள் முழு விலாசத்தையும் எழுதி அனுப்பினால் உடனே ஒரு V.P.P. ரூ. 1—8—0-க்கு அனுப்பப்படும். அதில் உங்களுக்கு எதிர்கால 12 மாதங்களுக்கு மாதவாரியாக பலாபலன்களும், வியாபாரத்தில் லாபம், நஷ்டம், உயர்வு, மாறுதல், தாழ்வு, கலியாணம், சந்தோஷம், சந்தானம், உடம்பில் ஏற்படும் பாதைகள், அவைகளிலிருந்து தப்புவிக்க மார்க்கங்கள் முதலியவைகள் அனுப்பப்படும். மேற் சொன்னவைகள் நிறைவேறாமல் போனால் பணம் வாபீஸ்.

SHRI MAHATMA ASHRAM, (CTM) Jullundur City

தமிழும் சம்ஸ்கிரதமும்

எம். எஸ். சுந்தரேசய்யர்

உலகத்தில் ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் நாட்டைப் புகழ்ந்து கூறுவது வழக்கம். அதே மாதிரி தங்கள் பாஷையையும் உயர்த்திக் கூறுவர். இவ்வாறு கூறுவது மக்களியற்கை. நாட்டுப் பற்றும், மொழிப்பற்றுமே இதற்குக் காரணம். இவ் வுண்மையை யறியாமல் பலர் சண்டையிடுகின்றனர்; யுத்தம் புரிகின்றனர்; மக்களை இகழ்கின்றனர்; அப்பாஷை சிறந்தது; இப்பாஷை தாழ்ந்தது என்று கூறி, வீணே நாட்டில் கலகத்தையும், குழப்பத்தையும் உண்டாக்கி விடுகின்றனர். தமிழர் தமிழ்ப் பாஷையை—தமிழ் மொழியை—தெய்வத் தமிழென்றும், கன்னித் தமிழென்றும், தனித்தமிழென்றும், தண்டமிழென்றும், வண்டமிழென்றும், பழந்தமிழென்றும் பலவாறு புகழ்ந்து கூறுவர். தமிழ் தென்மொழி யென்றுஞ் சொல்லப்படும். இந்தியாவின் தென் பாகத்தில் பேசப்படுவதால் இப்பெயர் வந்ததென்பர். இது தப்பென்றும், அழகான மொழி யென்றுதான் பொருள்படு மென்றும் வேறு சிலர் கூறுவர்—தென் = அழகு.

இதனால் "சம்ஸ்கிரதம்" வடமொழி யென்று வழங்கப்படுவதாயிற்று. ஆரியம், தேவபாஷை முதலியன சம்ஸ்கிரதத்தையே குறிக்கும்.

"வடமொழிக் கிணையாய் வழங்
 கும் ஒரு மொழி
உலகினிலுண்டோ உரைத்திடு
 வீரே"

என்றும்,

"தமிழ்மொழிக் குயர்மொழி
 தரணியி லுளதேனில்
வேதுளியற் றிருப்போன் வெறும்
 புலவோனே."

என்றும்,

கூறி வீண்வாதம் செய்து நாட்டிடை வாழும் அறிவோரும் இருக்கின்றனர். ஒரு பாஷையில் தனிச் சிறப்பிருக்குமாயின் அதை யாவரும் கற்கவேண்டியது அவசியம்; தற்காலம் ஆங்கில பாஷை உலகெங்கணும் பேசப்படுகிறது; புகழப்படுகிறது; கொண்டாடப்படுகிறது. இவ்வுண்மையை அறிஞர் பலர் அறிவர். பல பாஷைச் சொற்களும் ஆங்கிலத்தில் கலந்திருப்பதால் அதற்குப் பெருமை குறைந்து விட்டதாக யாரும் கூறுவதில்லை; அப்படியிருக்கத் தமிழ் சம்ஸ்கிரதக் கலப்பால் கெட்டுவிட்ட தென்றும், அதன் புனிதம் போய்விட்டதென்றும் கூறுவது ஒரு மயக்கமேயாம். தனித் தமிழ் எழுதுவோர் தனித்தமிழ் எழுதட்டும். அதனால் அவர் புலமை போற்றப்படும், வடமொழிச் சொற்களைக் கலந்தெழுதுவோர் கலந்தெழுதட்டும். அதனால் அவர் புலமை தூற்றப்படும். தமிழ்ப் பாஷையின் மேன்மை குறையாது; புனிதம் குன்றாது; தெய்வத் தன்மை போகாது. இது தான் நிறைந்த புலமையுடையோர் கண்ட உண்மை. உலகம், முகம், நீர், மீன் முதலிய சொற்கள் தமிழென்றும், வடமொழியென்றும் நாம் என் சொற்போர் புரியவேண்டும்? ஐரோப்பாக்கண்டத்தில் எத்தனை தேசங்களிருக்கின்றனவோ, அத்தனை தேசச் சொற்களும் ஆங்கிலத்திலிருக்கின்றன. இதனால் ஆங்கிலத்திற் கிழிவுண்டா? பல பாஷையில் தேர்ச்சி யடைந்த புலவர்கள் இன்ன இன்ன சொற்கள் இம்மொழியைச் சார்ந்

தவை யென்றும் கூறி, அம் மொழிகளின் மூலாதாரத்தைக் காட்டி அறிவை மென்மேலும் விருத்திசெய்து கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர். அதே போலத் தமிழ்ப் புலமையுடையோரும் திராவிட பாஷைகளையும், ஆரிய பாஷைகளையும் நன்கு கற்று, தமிழ்ப் பாஷையிற் காணப்படும் மற்றப் பாஷைச் சொற்களை யெடுத்துக் காட்டி, அவற்றின் மூலப் பொருள்களை வெளிப்படுத்தித் தனித்தமிழின் சிறப்பை விளக்கி, நம்மவர்களின் அறிவை விசாலப்படுத்தக் கூடாதா? பாலசுந்தரம் என்ற பெயரை "இளவழக" னென்றும், ஞானமூர்த்தி யென்ற பெயரை "அறிவுருவ" னென்றும், நீலகண்ட னென்ற பெயரைக் "கறுங்கழுத்த" னென்றும் மாற்றியமைத்துக்கொள்வதால் தமிழுக்குப் பெருமையும், ஆரியத்திற்குச் சிறுமையும் ஏற்பட்டு விடுமா? இக் குறுகிய நோக்கத்தினால் நம் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷை சிறப்படையாது.

தமிழ்ப்பாஷையை விருத்திசெய்ய வேண்டுமாயின்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியி லியற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதி லோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்யவேண்டும்."

என்ற பாட்டில் கூறியவண்ணம் தமிழர் முயலவேண்டும். அப்பொழுதுதான், தமிழ்மொழி இந்திய மொழியாகும்; என்? உலகமொழியா மென்றுஞ் சொல்லலாம்.

ஒரு தடவை உபாத்தியாயர் ஒருவர், பூகோள சாஸ்திரத்திற் காணப்படும் நதி, உபநதி, ஜலசந்தி, பூசந்தி, தீவு, தீபகற்பம், சமுத்திரம், அட்சரேகை, தீர்க்கரேகை, பூமத்தியரேகை, தூரம், சமீபம், குடகோளார்த்தம், குணகோளார்த்தம், கண்டம், தேசம், கிராமம், ஆரண்யம், வனாந்திரம், முதலியவற்றை யெடுத்துக்காட்டி இவ்வளவும் ஆரியர் செய்த சூழ்ச்சி யென்றார். எனக்கு ஒரு பக்கம் சந்தோஷமும், அவர் பேதைமையை நினைத்து மறுபக்கம் இரக்கமும் ஏற்பட்டன. ஆரியர் சூழ்ச்சியுமில்லை; தமிழர் சூழ்ச்சியுமில்லை யென்று நான் கூறி, நமது நாட்டின் துக்கமான—பரிதாபமான—நிலையை அவருக்கு எடுத்துக் காட்டினேன். அவர் என்னிடம் காண்பித்த அப் பூகோளப் புத்தகம் ஒரு பழுத்த தமிழரால் இயற்றப்பட்டிருந்தது! இது ஆரியர் சூழ்ச்சியா? தமிழரின் அறிவா? முயற்சி குறைவா? யோசித்துப் பாருங்கள் என்றேன். உடனே அவர் உண்மையையுணர்ந்து, ஆரியச் சொற்களுக்கெல்லாம் தமிழ்ச்சொற்களைக் காண வேண்டு மென்றார்.

வடமொழி	தமிழ்
மோட்சம்	—வீடு
ஞானம்	—அறிவு
தேகம்	—மெய்
பாதம்	—கால்
அம்பு	—எ
அக்கினி	—தீ
நதி	—ஆறு
சமுத்திரம்	—பரவை
புனிதம்	—தூய்மை
ஜீவியம்	—வாழ்க்கை
புஷ்பம்	—மலர்
வேதம்	—மறை
சந்தோஷம்	—களிப்பு
கிருபை	—அருள்

பட்சி	—பறவை
வஸ்திரம்	—துணி
பிரசங்கம்	—சொற்பொழிவு
ரிஷபம்	—எருது
சரித்திரம்	—வரலாறு
நட்சத்திரம்	—உடு
திரவியம்	—செல்வம்
உதாரணம்	—மேற்கோள்— எடுத்துக்காட்டு.
ஆச்சரியம்	—வியப்பு
விவாகம்	—மணம்
பாலர்	—இளைஞர்
சுபாவம்	—இயற்கை
சங்கமம்	—கலப்பு
சங்கடம்	—இடையூறு
சூரியன்	—ஞாயிறு
வருஷம்	—ஆண்டு
புத்திர பாக்யம்	—மகப்பேறு
பஞ்சேந்திரியம்	—ஐம்பொறி
சந்திரோதயம்	—நிலாத்தோற்றம்
தீபாலங்காரம்	—விளக்கணி
துக்கசாகரம்	—இடராழி
தர்ம ஸ்தாபனம்	—அறநிலையம்
காரியதரிசி	—செயலாளர்
தேவாநுக்கிரகம்	—கடவுளருள்
அஸ்த பூஷணம்	—கைக்கழகு
ஜீவராசி	—உயிர்க்கூட்டம்,

என்றிம்மாதிரி சிலவற்றை எடுத்துக் காட்டினேன். அவரும் உவகை எய்தினர். முயற்சியிருந்தால் தனித்தமிழில் சிறந்த வசனங்களை எழுதலாம். விஞ்ஞான சாஸ்திரங்களாகிய அறிவு நூற்களை அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கலாம்.

நேரிய தமிழ்ச் சொற்கள் கிடைக்காவிட்டால் இலத்தின் சொற்களையாவது, ஆங்கிலமொழியையாவது, சம்ஸ்கிரத பதத்தையாவது, அப்படியே எடுத்தாளலாம்; அதனால் குற்றம் இல்லை; தமிழ் வளர்ச்சியுறும் என்று நான் கூறினேன். அவரும் சரிதான் என்று ஒத்துக்கொண்டார்.

1. செங்கற்பட்டுக்குச் சமீபத்தில், இந்நதி சமுத்திரத்திற் சங்கமமாகிறது.

2. அந்தச் சிரேஷ்டமான அப்பியாசத்தால் தேகபலம் அதிகரிக்கிறது.

3. புத்ரா! மாதா பிதாக்களின் பாதத்தில் விழுந்து நமஸ்கரி.

என்றிவ்வாறு வடசொற்களைக் கலந்து வாக்கியங்களை யெழுதலாம். ஆனால் தனித்தமிழர் சினங்கொள்வர். ஆகையினால் இவ்வாக்கியங்களை இப்படித் தனித்தமிழிலேயே எழுதலாம்.

1. இவ்வாறு செங்கற்பட்டுக்கருகில் கடலுடன் கலக்கிறது.

2. அம் மேலான பயிற்சியால் உடலுரம் பெருகுகிறது.

3. மகனே! அன்னை தந்தையர்களின் அடியில் விழுந்து வணங்கு.

இவ் வியாசத்தில் ஏராளமான தமிழ்ச் சொற்களும் சம்ஸ்கிரதச் சொற்களும் கலந்திருக்கின்றன. ஏனெனில் "தமிழும் சம்ஸ்கிரதமும்" என்பது தலைப்பு.

பாப்பா பகுதி:

பொய் மெய்யானது

எஸ். ஐ. முத்து

மணியன் காரியூரில் வசிக்கும் அணங்கையர் வீட்டு வேலையாள். அவன் தினந் தோறும் சொன்னதைச் சொன்னபடி செய்தே தீருவான். ஆனால் ஐயர் மாத்திரம் அவனை நம்பவே மாட்டார்.

விருந்திற்கோ, அல்லது வேறு காரியத்திற்கோ அயலூருக்குப் போக வேண்டியதாயிருந்தால் அணங்கையர் மணியனைத் தான் துணையழைப்பார்.

அணங்கையர் ஓர் நாள் காலையில் மணியனை அழைத்து ஆறுமைல் தூரத்திற்கப்பால் கோணலூரிலிருக்கும் தம் தங்கை வீட்டுக்குப் போக வேண்டியதிருக்கிறது, என்று சொல்லி விட்டு ஸ்நானத்திற்குச் சென்றார். அணங்கையர் தம் இடது கரத்தில் ஓர் முடிச்சும், வலது கரத்தில் இணைபிரியா ஊன்று கோலும் ஏந்திக் கொண்டு புறப்பட்டார். அது என்ன பொட்டலம்?.... அதிலிருந்து வரும் சுகந்தத்தைப் பார்த்தாலே தெரிகிறதே! தங்கையின் குழந்தைகளுக்காகச் செய்து கொண்டு போகும் பட்சண பலகாரங்கள் தான்.

"சாமி நீங்களே சுமந்தால், அது........ நல்லாயில்லே. நான் எதற்காக வாரேன்? இப்படிக் குடுங்கோ அதை" என்று ஆரம்பித்தான் மணியன்.

"பரவாயில்லே. வேண்டாம்—நானே கொண்டு வருகிறேன்" என்று எஜமான் சமாதானம் சொல்லியும் மணியனுக்குத் திருப்தியாகவில்லே.

கடைசியில் தொந்தரவு பொறுக்க முடியாமல், "டேய்! இது ஒரு மருந்துக்கான வஸ்து. நம்ப தங்கை வீடு இருக்கோ இல்லேயோ, அதுக்கு எதிர்த்தாப்போலே ஒரு வீடு இருக்கே........ அந்த........பிள்ளை........அவருக்கு........ ஒரு நாலு பாம்பு பிடிச்சு வரச்சொன்னர் மருந்துக்கு. அது தான் பொட்டலத்தில்" என்று பதிலுக்குப் பதிலும் பொய்க்குப் பொய்யும் சொல்லிவிட்டார்.

ஆச்சரியம் மணியனை விட்டபாடில்லே. "ஐயோ உங்களேக் கடிச்சிடும். நானவது கொண்டு வாரேன். என்னைக் கடித்தாலும் பரவாயில்லே!" என்று வார்த்தைகளை வீசினன். இப்போது கண்டிப்பாகக் கொடுத்துத்தானே ஆகவேண்டும். "சரி, இந்தா!, நீ முன்னலே கொண்டுபோ. நான் மெதுவா நடந்துவறேன்" என்று சொல்லி முடிச்சைக் கொடுத்தார்.

வழியில் குறுக்கிட்ட குளத்தங்கரையில் நின்ற ஆலமரத்து நிழலில் அமர்ந்து முடிச்சைப் பரிசோதனை போட ஆரம்பித்தான் வேலையாள். அவிழ்த்தான் முடிச்சை. கண்டான் பலகாரங்களை—வாழைக்காய் கத்திரிக்காய் பஜ்ஜி..... தோசை—கொழுக்கட்டையும் கூட. கொண்டான் சந்தோஷம். உண்டான் ஆசை தீர. காலியாயிருந்த வயிற்றுக் குள்ளும் குளத்துத் தண்ணீரை அளந்து விட்டு நிரப்பிக்கொண்டான்.

பின்னும் கொஞ்ச நேரம் குளத்தின் கரையில் சுற்றிச் சுற்றித் திரிந்தான். எதற்காகவென்று பார்த்தால், ஐயர் சொன்னரே அந்தப் போய் மெய்யாகட்டுமே என்பதற்காகத்தான்.

“டேய்! என்னடா உட்கார்ந்துண்டு இருக்கறே. ஆபத்து ஏதாவது நடந்துதோ பாம்பாலே?” என்று கேட்டுக்கொண்டே அணங்கையர் வந்து நின்றார். “இல்லே, இல்லே....”என்று வாயெல்லாம் பல்லாகத் தெரிய பதில் சொன்னன்.

கோணலூருக்குச் சமீபமாய் வரும்போது ஐயர் பொட்டலத்தை வாங்கிக் கொண்டார்—தமையனைக் கண்ட தங்கை ஆர்வத்துடன் ஓடிவந்து வரவேற்று மணியனையும் விசாரித்தாள்.

“அடீ அலமு! இங்கே வா. அழறயே........இதோ........”

“ஏண்டீ அழறே” என்று குழந்தைக்குச் சமாதானம் சொல்லி குழந்தையை முகத்தோடு அணைத்து முத்தம் சொரிந்தும் அழுகை நின்ற பாடில்லே. போனல் போகிறது. பட்சணம் தான் இருக்கவே இருக்கிறதே.

பொட்டலத்தை எடுத்து முன்னல் வைத்தார் அணங்கையர். மணியனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லே.

என்ன ஆச்சரியம்? பக்கத்திலிருந்த குழந்தை வீறிட்டுக் கதறி விட்டது. தாயார் ஓடிப் போய் சுவரில் முட்டிக் கொண்டாள். ஐயரும் குந்திக் குந்தி விழுந்தடித்து உருண்டு விட்டார்.

முடிச்சுக்குள்ளிருந்த பலகாரங்களெல்லாம் பாம்பாக மாறி மூலேக்கு ஒன்ருக உருவி யோடியது. எங்கும் ஒரே களேபரம். நல்லவேளையாய் அவைகள் தண்ணீர்ப் பாம்புகள். எல்லோரும் ஓடி வந்து— மணியனும் கூட, பாம்புகளை அடித்துக் கொன்றனர்.

ஐயருக்கு அவமானம் ஒரு பக்கம்; கோபம் மறுபக்கம். அந்தக் கூட்டத்தில் அவருடைய கண்கள் மணியனைத் தேடி நின்றன. ஆனல் அவன் அவருடைய கண்ணில் படவில்லே. அன்று ஓடியவன் இன்னும் திரும்பி வரவில்லே. அன்று முதல் அணங்கையர் இன்று வரை தேடிக் கொண்டு தானிருக்கிருர்.

குழந்தைகளே! உங்களுக்கு மணியனிருக்குமிடம் தெரிந்திருந்தால் தயவுசெய்து நீங்கள் அணங்கையரிடம் சொல்லி விட வேண்டாம்.

சி. எம். சாமி

மன்மத குளிகை

மிருந்த பலத்தையும்
வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது. இதற்கு நிகரான தாதுபுஷ்டி ஔடதம் வேறில்லை.

ஒரே குளிகையில் பரிக்ஷிக்கலாம்.

இழந்த ஆண்மையும் பலமும் திரும்ப வரும். ஜீரணம், ரத்த விருத்தி, இந்திரியக் கட்டு, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கியாட்லாக்கிற்கு எழுதுங்கள்.

60-குளிகை விலை ரூ. **5—0—0.**
20-குளிகை விலை ரூ. **2—0—0.**

தலைமை ஆபீஸ்:—மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

பிராஞ்சு :—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 143, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்

9—5—'38-ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்.

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர் புஜண்டர், சாஸ்திர நிபுணர், ஜாதகம் கணிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம், விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ் (ஒவ்வொரு காரியம் சித்தி பெறும் சந்திரன் நாட்களும் மணிக்கு மணி பலாபலன் அட்டவணையுடன்) மற்றும் பலன்கள் மாதவாரியாக எழுத ரூ. 3. ஓர் திசைக்கு புத்தி பலன் ரூ. 3. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்பிரமணியம், J. M. & J. A.,
நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P. O. (சென்னை)

என்ன யோசனை ?

ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்

"என்ன யோசனை செய்கிறீர்" என்று தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள் ஸரஸா. மனைவியின் சொல் காதில் படாத மாதிரி பாவனை செய்து, திடீரென்று "என்ன சொன்னாய்? நான் ஏதோ யோசனையில் ஆழ்ந்து இருந்தேன். ஆகையால் நீ சொன்னது காதில் படவில்லை. தீபாவளி வருகிறதே, மாப்பிள்ளைக்குச் செய்யவேண்டிய சீர் வரிசை விஷயமாய் ஒரே யோசனைதான். மற்றப்படி உன்னையும், சம்பந்தி வீட்டாரையும் திருப்தி செய்ய வேண்டியது மற்றொரு பெரிய யோசனை. இவ்விரண்டையும் எந்த வழியில் நிறை வேற்றலாம் என்பது மூன்றாவது மிகப் பெரிய யோசனை. இவ்வளவு யோசனைகளையும் மனதில் கொண்ட என்னைப் போல் உள்ள ஒருவனுக்கு எவ்வளவு பிரிய முள்ளவர் என்ன சொன்னாலும் காதில் விழாதது சகஜந்தானே!" என்பதாக ஈனக் குரலில் கோபாலன் தன் மனைவி ஸரஸாவிடம் சொன்னார்.

"யோசனை, யோசனை ; யோசனை. இப்படிப்பட்ட யோசனை உம்முடைய வைகளை விட, எனக்கு எத்தனை யோசனை? யோசிப்பதில் என்ன பயன்? உமக்குக் கலியாணம் ஆகும் போதே யோசனை செய்திருந்தால், இவ்வித யோசனைக்கு நீங்கள் ஆளாகாமல் இருந்திருக்கலாம் அல்லவா? நான் எவ்வளவு யோசனை செய்து, உம்மிடம் வந்து, நம் பெண்ணுக்கு தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய சீர் வரிசை செய்ய வேண்டும் என்று யோசிக்க வந்தேன். மேலும் சம்பந்திக்குச் செய்ய வேண்டிய மரியாதை, மாப்பிள்ளையின் மனது கோணாமல் இருக்க வேண்டிய விதம் ஆகிய முக்கிய யோசனைகளையும் செய்திருந்தேன்" என்று ஸரஸாவும் சொன்னாள்.

"நம் இருவர் யோசனையும் என்ன, பேசினது போல் இருக்கிறதே. யோசனையின் பயன் ஒருவாறு நிறைவேற அடுத்த யோசனை லக்ஷ்மியின் யோசனை—'லக்ஷ்மி! உன்னை நான் எவ்வாறு பெறுவது? என் யோசனைகள் எவ்வாறு நிறைவேறுவது என் மனைவிக்கு என்ன பதில்? சொல்வது? லக்ஷ்மி! நீ சீக்கிரம் வந்து உதவி புரிந்தால் எனக்கு யோசனை தீரும்" என்று மெதுவாக உதடு அசையச் சொன்னார் கோபாலன்.

ஸரஸாவிற்கு மிகுந்த யோசனை வந்து விட்டது. தன் சகோதரி ஜானி (விதவை ஜானகி)யின் புக்ககத்துப் பெயர் லக்ஷ்மி. லக்ஷ்மிக்கு கையில் ரொக்கம் கொஞ்சம் உண்டு. இதை எப்படியாவது வாங்கி தீபாவளிக்கு செலவு செய்ய யோசனை செய்கிறார் போல் இருக்கிறது. தன் கணவன், என்று மிகவும் யோசனை செய்யலானாள் ஸரஸா.

கோபாலனும், ஸரஸாவும், ஒருவர் முகம் ஒருவர் பாராமல் தங்கள் யோசனையிலேயே ஆழ்ந்து விட்டார்கள். கமலா வந்தாள். தன் தாயார், தகப்பனார் உட்கார்ந்திருக்கும் காக்ஷியைக் கண்டாள். "என்னைப் பாருங்கள்; என்ன யோசனை செய்கிறீர்கள்? எழுந்திருங்கள்! லக்ஷ்மி சித்தி வந்து விட்டாள்" என்றாள். "என் யோசனை நிறைவேறியது" என்றார் கோபாலன். "என் யோசனை நிறைவேறவில்லை" என்றாள் ஸரஸா. கமலத்தின் சித்தி தீபாவளிக்கும், கோபாலனுக்கு வரவேண்டிய தனலக்ஷ்மியான நெல்லும் வண்டியில் வந்தன. ஸரஸாவின் யோசனை மாறிற்று.

திருட்டுக் காதலா ?

எஸ். சுப்ரமணியன், எம். ஏ;

"காதலி, நான் உன்னைத் தவிர வேறொருவரையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. மனத்தால்கூட வேறொருவரையும் நான் நினைக்க மாட்டேன். நீயும் என்னைக் காதலிக்கிறாயா?" என்று கேட்டேன் நான்.

"ஆம், காதலிக்கிறேன்" என்றாள் என் காதலி.

"நீ இதற்கு முன் யாரையாவது காதலித்திருக்கிறாயா?" என்று கேட்டேன்.

"இல்லை," என்று சுருக்கமாகப் பதிலளித்தாள் அவள்.

"உன் காதல் இதயத்திலிருந்து எழுகிறதா? அல்லது உன் உதட்டிலிருந்து வருகிறதா?" என்று நான் கேட்டேன்.

"என் இதயத்திலிருந்து தான் எழுகிறது," என்றாள் அவள்.

"நீ வேறு யாரையும் காதலிக்க மாட்டாயே?" என்று கேட்டேன் நான்.

"வேறு யாரையும் காதலிக்க மாட்டேன். ஏன் உங்களுக்கு இவ்வளவு சந்தேகம்? நான் உங்களை என் மனமாரக் காதலிக்கிறேன். நீங்கள் தான் என் உயிர்," என்றாள் அவள்.

"சரி, நம் கலியாணத்திற்கு முன் உன் தகப்பனார் சம்மதத்தையும் நாம் பெறவேண்டாமா?" என்று கேட்டேன் நான்.

"என் விருப்பப்படி அவர் எதுவும் செய்வார். அப்படி என் தகப்பனார் இம்மணத்திற்குச் சம்மதப்படாவிட்டாலும் பரவாயில்லை. நான் அவரிஷ்டப்படி மணந்து கொள்வது எதற்காக? என் கணவருடன் நான் வாழப் போகிறேனா? அவர் வாழப் போகிறாரா? நான் காதல் மணத்தில் பெரிதும் நம்பிக்கை யுள்ளவள். என் காதலுக்காக நான் என் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக யிருக்கிறேன்" என்றாள் அவள்.

"நீ கவலைப்படாதே. கடவுள் நம் எண்ணத்தைக் கைகூட வைப்பார்," என்றேன் நான்.

நானும் கடவுளை நம்பித்தான் இருக்கிறேன்" என்றாள் அவள்.

"அப்படி யென்றால் நல்ல நாளாகப் பார்க்க வேண்டியது தான் பாக்கி," என்று சிரித்த வண்ணமாக நான் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே யாரோ தடால் என்று அவ்வறையின் கதவைத் திறந்த சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அது யார் என்று நினைக்கிறீர்கள்? என் சகதர்மிணியான ஸரஸாதான்!

ருத்திராவேச ரூபமாகக் காக்ஷி கொடுத்தாள் அவள். அவள் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது. பற்களை நற நறவென்று கடித்தாள். புருவத்தை நெறித்தாள். மீசை படபடவென்று துடித்தது. (இல்லை யில்லை. அவளுக்கு மீசைதான் கிடையாதே!)

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆடு திருடின குறவனைப் போல் திரு திருவென்று விழித்தேன்.

ஸரஸா என் காதலியைப் பார்த்து, "அடி நாயே! நீ யாரடி? போடி வெளியே. என் கணவரை சொக்குப் பொடி போட்டு மயக்கிக் கொண்டு போய் விடலாம் என்று நினைத்தா

யோ? படு நீலி! எவ்வளவு துணிச்சலாக என் வீட்டினுள்ளேயே நுழைந்து என் கணவனை அபகரித்துக் கொண்டு போகப் பார்த்தாயடி, உன் கணவனை இன்னொரு ஸ்திரீ இப்படி இழுத்துச்செல்ல யத்தனிப்பதை நீ அறிந்தால் உன் மனம் எப்படிக் கொதிக்கும்? நீயே யோசித்துப் பார். நான் நீங்களிருவரும் பேசியதையெல்லாம் ஒட்டுக் கேட்டுக் கொண்டுதானிருந்தேன், எ மோசக்காரி! போடி வெளியே,'' என்று கர்ச்சித்துவிட்டு என் பக்கம் திரும்பி, ''நன்றாயிருக்கிறது! உங்கள் நடத்தை! இப்பொழுது இவள் மேல் உங்கள் கண் விழுந்து விட்டதா? பலபேஷ்! புருஷாள் லக்ஷணம் ஒரு நொடியில் தெரிந்து விட்டதே. திருட்டுக் காதலுக்குப் புருஷர் பேர்போனவர்களாயிற்றே. வண்டு நிமிஷத்திற்கு நிமிஷம் வேறு வேறு புஷ்பத்தில் போய் தேன் குடிப்பதைப் போல இந்தப் புருஷர்களும் நிமிஷத்திற்கு நிமிஷம் வேறு வேறு பெண்களைத் தேடி யனுபவிக்க விரும்புகிறார்கள். கற்பு என்பது பெண்டிர்களுக்குத் தானு? ஆடவர்களுக்கு இல்லையா? சீ! வெளியில் சொன்னுல் வெட்கக் கேடு,'' என்று உருமிவிட்டு மறுபடியும் அந்தப் பெண் மணியின் பக்கம் தன் காளி கடாக்ஷத்தை வீசினுள்.

ஆனுல் மறுபடியும் அவள் வாயைத் திறப்பதற்கு முன் நான், ''என்ன ஸரஸா, விஷயத்தை நன்றாயறிந்து கொள்ளாமல் பேசிக்கொண்டே போகிறுயே,'' என்றேன்.

''விஷயம் முழுவதும் எனக்குத் தெரியும். நான் தான் நீங்கள் பேசுவதை யெல்லாம் ஒட்டுக் கேட்டுக் கொண்டே யிருந்தேனே. என்னை நீங்கள் இனிமேல் ஒன்றும் எமாற்ற முடியாது. 'நல்ல நாள் பார்க்க வேண்டியது தான் பாக்கி' என்று இப்பொழுது தான் நீங்கள் சொன்னீர்களே,'' என்று துடுக்காகக் கேட்டாள் ஸரஸா.

''ஸரஸா, அவசரப் படாமல் கொஞ்சம் சாவதானமாகக் கேள், இது யார் என்று உனக்குத் தெரியுமா? உண்மையாகவே என் காதலி என்று தானே நீ நினைத்து விட்டாய்? அடி பைத்தியமே! இவர் தான் பேர்போன ஸ்திரீ பார்ட் சுந்தரமய்யர் இவரை இந்த வேஷத்தில் பார்ப்பவர்கள் யாருமே இவர் உண்மையில் ஒரு ஸ்திரீ என்று தான் கூறுவார்கள், அவ்வளவு வேஷப் பொருத்தம் இவருக்கு இருக்கிறது. நாங்கள் ஒரு நாடகம் நடத்த விரும்பி இப்பொழுது கடைசி ஒத்திகை போட்டுக் கொண்டிருக்கிறோம். நடுவில் நீ நுழைந்து பெரிய கலாட்டா பண்ணி விட்டாயே'' என்றேன் நான்

அப்பொழுது அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

24 வருஷமாகச்

சென்னையில் பிரபலமானவர். எதிர்கால பல நிபுணர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5 மாதவாரி வருஷப் பலன் ரூ. 3. எதிர்கால கேள்வி 6-க்கு ரூ .1. பொதுப்பலன் ரூ. 10. ஆயுள்வரை புக்திவாரி பலன் எழுத ரூ. 25. (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை)

ஜோதிஷரத்னம் பண்டிட் M. R. K. மூர்த்தி.

133, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், மத்ராஸ்.

விசித்திரக் குளம்

தெ. மாசில்லாமணி

அன்று மிகவும் கடுமையான வெய்யல். பகல் பன்னிரண்டு மணி இருக்கும். ஓர் வழிப் போக்கன் மிகவும் களைப் படைந்தவனாய் ஓர் காடு முரடான பாதையில் சென்றான். அவனுக்கு ஓர் குளம் தென்பட்டது. அவன் அதிக தூரம் நடந்து வந்ததால் சோர்வுற்றிருந்தான். அக்குளத்தைக் கண்டவுடன் ஓர் புத்துணர்வு உண்டாயிற்று. உடனே அக்குளத்திலிறங்கி தாகந்தீரக் குடித்தான். பிறகு அக்குளத்தின் அருகில் இருக்கும் ஓர் பெரிய ஆலமரத்தின் நிழலில் படுத்து நித்திரை செய்தான்.

அப்பொழுது அக்கிராமத்து வாசியான சுப்பன் ஓர் பெரிய தவலையை எடுத்துக் கொண்டு தண்ணீர் நிரப்ப அங்கு வந்தான். அவனுடைய மனைவி மிகவும் சண்டைக்காரி, கர்வமுள்ளவள். தண்ணீர் கொண்டுவருவது சாமான்களைத் துலக்குவது முதலிய எல்லா வீட்டு வேலைகளையும் சுப்பனே செய்து வந்தான். அவன் அங்கு படுத்துறங்கிக் கொண்டிருக்கும் வழிப்போக்கனைக் கண்டான். அவன் அருகில் சென்று அவனைத்தட்டி எழுப்பினான். தூங்கிக் கொண்டிருந்த அவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

சுப்பன் அவனை நோக்கி "உனக்குக் கலியாணம் ஆய்விட்டதா? இல்லையா?" என்று கேட்டான். அவன் பதில் கூறு முன் சுப்பன் மீண்டும் தொடங்கி "உன்மனைவி இந்த சண்டிகாபுரத்தில் தான் இருக்கிறாளா? இல்லையாயின் நீ மிகவும் பாக்கியசாலி" என்று கூறிமுடித்தான்.

அந்த மனிதனுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது தயங்கி பிறகு, தன் மனைவி அச்சண்டியில் (சண்டி என்பது அவ்வூரின் அழைப்புப் பெயர்) இல்லை என்றும் அநேக முறை அவ்வூரின் பெயரைக் குறிப்பிட்டு அங்கு செல்லவேண்டு மென்று வற்புறுத்தி இருக்கிறாள் என்றும் கூறினான். பிறகு தன்னை என் பாக்கியசாலி என்று கூறினன் என்று கேட்டான்.

அதற்கு சுப்பன் அக்குளத்தின் வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்:—

"முன் ஒரு காலத்தில் சண்டிகை அம்மை என்ற சந்நியாசினி இங்கு இருந்தாள். அவள் இறப்பதற்கு முன் இக்குளத்தில் ஜலத்திற்கு ஓர் சாபமிட்டு இறந்தாள். அதாவது 'சதி, பதிகள் இருவரில் எவர் முதலில் இக்குளத்து ஜலத்தைக் குடிக்கின்றனரோ அவர் மற்றவரை அடக்கி ஆளக்கடவது' என்பது தான்!

இதைக் கேட்டவுடன் முருகேசன் (அந்த வழிப் போக்கனது பெயர்) குளத்தில் இன்னொரு முறை இறங்கித் தண்ணீர் குடித்தான். அதைக் கண்ட சுப்பனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவன் அப்படிச் செய்ததற்குக் காரணம் என்னவென்று வினவினான். அதற்கு அவன் தன் மனைவி ஆண்டாள் மிகவும் பொல்லாதவள் என்றும் அவள் படுத்துகிற உபத்திரவத்தைப் பொறுக்க முடியாமையால், தான் அங்கு விட்டு ஓடிவந்து விட்டதாகவும் கூறினான். சிறிது நேரத்தில் அவர்கள் இருவர் மனைவிகளும் ஒரே குணமுள்ளவர்கள் என்று உணர்ந்தார்கள்.

முருகேசனுக்கு சுப்பனை ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று வெகு ஆசை. ஆனால் அக்கேள்வி கேட்பதற்கு முதலில் கொஞ்சம் சங்கோஜப்பட்டான். பிறகு, "நீ முதலில் இந்தக் குளத்துத் தண்ணீரைக் குடித்தாயா? அல்லது உன் மனைவி முதலில் குடித்தாளா?" என்று கேட்டான்.

சுப்பனுக்கு முகம் சிறிது சுருங்கி விட்டது. பிறகு ஒருவாறாக தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான்:—

"எனக்கு இருபது வயதிலேயே கலியாணம் ஆய்விட்டது. என் மனைவிக்கு அப்பொழுது பதினைந்து வயதுதான் இருக்கும். அவள் சிறு வயதிலே மிகவும் பொல்லாதவள். என்னைப் படுத்தும் பாடு கடவுளுக்குத் தான் தெரியும்.................. எனக்கு கலியாணம் முடிந்தவுடன் நான் இந்தக் குளத்திற்குஓடி வந்தேன். தண்ணீரைக் குடித்துவிட்டு வீடு திரும்பினேன். வீட்டு வாசற்படியில் என் மனைவி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். என்னைப் பார்த்து அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சமாசாரம் என்ன என்று அவளைக் கேட்டேன்.

"நீங்கள் சண்டி குளத்திற்கு தானே போய்விட்டு வருகிறீர்கள்? நீங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று முன்னமேயே தெரியும். அதனால் நேற்றே ஓர் புட்டியில் அந்தக் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து வைத்திருந்தேன். 'நீங்கள் எனக்குத் தாலி கட்டியதும் வேகமாய் வீட்டை விட்டு ஓடினீர்கள் அல்லவா? உடனே அதை எடுத்துக் குடித்து விட்டேன்! என்றாள் அவள்!"

தீபாவளி ராத்ரியன்று சித்தியடைந்தது



இந்த தாயத்தை வரவழைத்து, ராத்திரி தூங்குகிற சமயத்தில் தலைப் பக்கத்தில் படுத்துக்கொண்டு எந்த கேள்விக்குப் பதில் வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுகிறோமோ அதற்கு சுவப்னத்தில் சரியான பதில் கொடுக்கும். இதனால் களவு போன சாமான், புதையல் பொருள்கள் இருக்குமிடத்தைச் சொல்லும். அத்துடன் இறந்து போனவர்களுடனும் பேசலாம். இதை அணிந்து கொள்ளுவதால் உத்யோகப் பிராப்தி, கோர்ட்டு வழக்குகளில் ஜயம், லாட்டரிகளில் வெற்றி, பரீக்ஷைகளிலும் வெற்றி, நேசிப்பவர்களை அடையவும் பூர்ணமாக உதவி செய்யும். இதன் விலை ரூ. 1-4-0. தபால் கூலி அணா 0-5-0. பொய்யென்று ரூபித்தால் விலை வாபஸ். புருஷர்களுடைய குணங்களை கண்டறிய வேண்டுமானால் சக்தியுள்ள 5 நெ. கவசம் விலை ரூ. 3-15-0. இந்த கவசத்தை உபயோகப்படுத்துவதற்கு யாதொன்றும் தயார் செய்ய வேண்டியதில்லை, இதை அணிவதால் யாதொரு கஷ்டமும்நேரிடாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, (C.T.M.) JULLUNDUR CITY

கீழ்க்கண்ட இடங்களில்

பொது அறிவுப் போட்டிக் கூபன்கள்

வேண்டுவோர் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1. ஸிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98, A, வாலாஜா ரோடு, மவுண்டு ரோட் மதறாஸ்.
2. சுகானந்த ஸ்டால், பெரியகடை வீதி கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்பகோன், 42, வடக்கு சித்திரை வீதி, மதுரை.
4. சாரதி நியூஸ் ஏஜன்ஸி, உறையூர்-திருச்சி.
5. கே. வேணுபிள்ளை, வடக்குரத வீதி, திருநெல்வேலி டவுன்.
6. டி.எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மானோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
7. டி. எஸ். வேணுகோபால், நியூஸ் ஏஜண்டு, மெயின் ரோடு, சேலம்.
8. என். சாரங்கபாணி, நியூஸ் ஏஜண்டு புதிய மார்க்கட் மாதுங்கா, பம்பாய் 19.
9. ஆனந்தா புக் டிப்போ, 2 & 3 நியூ மார்க்கட் ரோட், பெங்களூர் தண்டு.
10. த. தம்பித்துரை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
11. காமாக்ஷி செட்டியார் அண் சன்ஸ், சுல்தான் பேட்டை, பாலக்காடு.
12. R. K. ஷண்முக முதலியார், மார்க்கட்டு, வேலூர்.
13. ஜி. ராஜகோபால் பிள்ளை, ஜெனரல் மர்ச்சென்ட், கடை வீதி, மாயவரம்.
14. R. நாராயணசாமி ஆச்சாரியார், பாத்திர வியாபாரம், திண்டுக்கல்.
15. ரஹிம்ஸ் நியூஸ் மார்ட், நுவாரேலியா (Ceylon.)
16. M. O. முருகேசப் பிள்ளை, நாவலப்பிட்டியா, (Ceylon.)
17. தி நியூஸ் கார்ப்பொரேஷன், திருச்செங்கோடு.
